# அரசாளப் பிறந்த நம்பி

ஏ. நாராயணசாமி

TB
O-,6.(10)
N59
163025

# அரசாளப் பிறந்த நம்பி

ஏ. நாராயணசாமி

*தலைமைத் தமிழாசிரியர்,*
*ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி,*
*தியாகராயநகர்.*

**அல்லயன்ஸ் கம்பெனி**
தபால் பெட்டி நெ. 617
மயிலாப்பூர் : : சென்னை-4

உரிமை பதிவு - ஐந்தாம் பதிப்பு - மே 1959


| | | |
|---|---|---|
| Name of the Book | : | **Arasalap Piranda Nambi** |
| Name of the Publisher | : | **The Alliance Company, Mylapore, Madras.** |
| Name of the Author | : | **A. Narayanaswami** |
| Name of the Printer | : | **The Alliance Press, Mylapore, Madras.** |
| Kind of Paper used | : | **24 lbs. D/Crown White Printing.** |

Price: 75 **n.Ps.**

Approved by The Madras T. B. C.
for class use, Non-detailed Study.
Vide Gaz. Page 22 of 10-4-57

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை-4.

# 1. அறிவுத்துறை கடந்த அரும்பெரும் புலவன்

இந்தியநாடு முழுமையும் ஆளத்திட்டமிட்டான் ஒரு வெற்றி வீரன். அவனே அலெக்ஸாண்டர். பாரசீக மன்னனை வென்று இந்தியாவின் மேற்குப் பகுதிகளை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டே வந்தான். மேற்கரங்கங்களை ஆண்ட அசுவஜித், போரஸ் என்ற வேந்தர்கள் அவனைக் கடுமையாக எதிர்த்தனர். போரஸ் என்பவனைப் பர்வதேசுவரன் என்று கூறுவர். கடுமையாக நடந்த போரில் அசுவஜித் மாண்டான். அலெக்ஸாண்டருக்கு மேலும் வெற்றி கிட்டாமல் இருப்பதற்குப் போரஸ் கடும் போர் புரிந்தான். அலெக்ஸாண்டர் இவனுடைய வீரத்தைக் கண்டு மகிழ்ந்து போர் செய்வதை நிறுத்திக்கொண்டான். இவனுடன் சமாதானம் செய்துகொண்டான். பர்வதேசுவரன் ஆண்ட நாட்டில் அமைந்த தக்ஷசீலப் பல்கலைக்கழகம் முதலியன அலெக்ஸாண்டருடைய கண்களைக் கவர்ந்தன.

அவன் பர்வதேசுவரனுடன் அங்கேயே தங்கி விட்டான்.

அலெக்ஸாண்டர் பர்வதேசுவரனுடன் அவனைச் சேர்ந்த அரண்மனையில் தங்கிய காலத்தில் மகத நாட்டில் நந்த வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டு வந்தனர். அலெக்ஸாண்டர் மகதத்தை வென்றடிமைப்படுத்த நினைத்தான். ஆனால் அவனுடைய படைவீரர்கள் தயங்கிய காரணத்தால் மகத நாட்டின்மேல் படையெடுப்பதை நிறுத்திக் கொண்டான். அக்காலத்தில் மகதநாடு சிறந்த அரண்கள் முதலியவற்றைக் கொண்ட நாடாக விளங்கிற்று. அந்த நாட்டை ஆளப் பிறந்திருந்தான் ஒரு நம்பி. அவனே மௌரிய வம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தன் என்பவன். ஆனால் அந் நாட்டை நந்த வமிசத்தைச் சேர்ந்தவர்கள் முறை தவறி ஆண்டுவந்தனர். அப்பொழுது ஆண்ட மன்னனின் பெயர் சுகற்பன் என்னும் நந்தன்.

சந்திரகுப்தன் நாட்டைப் பெற்று ஆளுவதற்கு வாய்ப்பாகத் தோன்றியிருந்தான் ஒரு நம்பி. அவனே உலகப் புகழ்பெற்ற சாணக்கியன் என்பான். சந்திர குப்தனுக்கு வலக்கைபோன்று உறுதுணையாக வாய்க்கவும், மகத நாட்டில் அறத்தை நிலை நாட்டவும் சாணக்கியன் தோன்றியிருந்தான் என்று கூறுவோமானால் அது மிகையாகாது. சாணக்கியன் தென்னாட்டில் முசிறித் துறைக்கண் தோன்றியதாகக் கூறுவர் ஆன்றோர். சாணக்கியன் மறைவர்

குலத்தில் தோன்றி நான்மறைகளையும் நன்கு கற்று அவற்றின் பொருள்களை யெல்லாம் உணர்ந்தான்.

'உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்''

என்று ஆன்றோர்கூறியதற்கேற்ப, இவன் சிறிய உருவத்தை உடையவனாகவும் கருத்த மேனியை உடையவனாகவும் திகழ்ந்தான். உடலில் சிறியவன்தான். ஆனால் கல்விக் கடலின் பெருமையைக் கடந்திருந்தான். புறத் தோற்றத்தில் கருமையாக இருந்தான். ஆனால் அகத்தில் தூய்மை யுடையவனாய் விளங்கினான். நாட்டில் என்றும் அழியாத அறத்தை நிலை நாட்டப் பிறந்திருந்தான்.

சாணக்கியனுக்குக் கூரிய அறிவும் சூழ்ச்சித் திறனும் மிகுதியாக அமைந்திருந்தன. இவனுடைய எண்ணம் முழுவதும் மேலும் மேலும் கற்றுத் தேற வேண்டும் என்ற அவாவிலேயே குடிகொண்டிருந்தது. தன் பெற்றோருடன் வேறு நாட்டுக்குச் சென்று கற்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தான். பெற்றோருடன் தக்ஷசீலம் சென்று அரும் பெருங் கலைகளைக் கற்றான். மருத்துவம், வானநூல், வாணிபம் முதலிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தான். அவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்தான். அறத்தோடு இயைந்திருப்பது பொருள் என உணர்ந்து பொருள் நூலை நன்கு கற்று, அரசியல் துறையைப் பற்றி ஆராய்ந்தான். இப் பொருள் நூலில் காணப்படும்

அரசியல் முதலியவற்றை விளக்கி அர்த்த சாஸ்திரம் என்னும் நூலை எழுதி வந்தான். இவனுடைய அறிவுத்திறம் நாடெங்கும் பரவியது.

அக்காலத்தில் காசி நகரில் கலை ஆராய்ச்சிகள் நிகழ்வதுண்டு. அப்பொழுது கலைபற்றிய ஆராய்ச்சிகள், சொற்போர்கள், சொற்பொழிவுகள் முதலியன நிகழும். அவற்றில் போட்டிகளும் நிகழும். அவற்றில் வெற்றி பெறுவோருக்குச் சிறந்த பரிசுகள் ஈவர். சாணக்கியன் அந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் பெருவிருப்பம் கொண்டான். தன் தாய் முதலியோருடன் காசி நகரை அடைந்தான். கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டான். போட்டிகளில் கலந்துகொண்டு சிறந்த வெற்றிகளைப் பெற்ருன். அவனுக்கு ஏராளமான பரிசுகள் அளிக்கப்பெற்றன. சாணக்கியனுடைய புகழ் நாடெங்கும் பரவிற்று.

சாணக்கியனுடைய தாயின் பெயர் தேவகி. தேவகிக்கு மகள் வயிற்றில் பிறந்த ஒரு பெண் இருந்தாள். அவள் மிகுந்த எழில் பெற்றவளாகவும், நற்குணம் முதலிய பண்பு உடையவளாகவும் திகழ்ந்தாள். இவள் பெயர் கௌதமி. கௌதமியைச் சிறு பிராயம் முதற்கொண்டு தேவகியேவளர்த்துவந்தாள். கௌதமிக்குத் திருமணப் பருவம் எய்தியது. தேவகி தான் அருமையாக வளர்த்த பெண்ணைத் தன் உறவிலேயே திருமணம் செய்துகொடுக்க நினைத்தாள். அவளுக்கு அதற்கோர் வாய்ப்பும் கிட்டிற்று.

சாணக்கியன் சிறந்த வெற்றிகளைப் பெற்றதற்கு அறிகுறியாக அவனை விருதுகளோடு, யானையின்

யேல் ஏற்றி ஊர்வலம் வந்தனர். அது கண் கொள்ளாக் கவின்பெறு காட்சியாக விளங்கிற்று. அக்காட்சியைத் தேவகியும், கௌதமியும் கண்டனர். இதனைக் கண்ட கௌதமியின் எண்ணமெல்லாம் சாணக்கியனையே நாடிற்று. இதைக் குறிப்பாக அறிந்த தேவகி சாணக்கியனுக்குக் கௌதமியைத் திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானித்தாள். சாணக்கியனிடத்திலும் தன் கருத்தை எடுத்துக் கூறினாள். அவனும் மிக மகிழ்ச்சியோடு உடன்பட்டான்.

கௌதமிக்கும் சாணக்கியனுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு ஏராளமான உறவினரும் ஆன்றோர்களும் குழுமியிருந்தனர். இவர்களுடைய திருமணம் ஒரு விழாவைப்போல் கொண்டாடப்பெற்றது. சின்னாட்கள் காசியிலேயே தங்கியிருந்தனர். ஆனால் சாணக்கியன் நாட்டில் அறத்தை நிலைநாட்டி அரும்பெருஞ் செயல்களை ஆற்ற எண்ணினான். அவன் மகத நாட்டில் நந்தர்கள் ஆட்சி புரிவதைப் பற்றிக் கேள்வியுற்று அந் நாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

## 2. சந்திரகுப்த - சாணக்கியர் சந்திப்பு

அலெக்ஸாண்டர் கிரேக்கப் படைகளைக் கொண்டு மேற்கரங்கங்களை வென்று தக்ஷசீலத்தில் தங்கி இருந்தான். அலெக்ஸாண்டர் கிழக்குப் பக்கமாகிய மகத நாட்டிற்குச் செல்ல நினைத்தான். ஆனால் அவனுடைய போர் வீரர்கள் மகத நாட்டிற்குச் செல்ல மறுத்தனர். அப்பொழுது மகத நாட்டில் சுகற்பன் என்னும் வேந்தன் ஆண்டு வந்தான். அவன் நந்த வமிசத்தைச் சேர்ந்தவன். நாடாளப் பிறந்த நம்பியாகிய சந்திரகுப்தன் நந்தனுடைய ஆட்சியில் பணியாளனாக இருந்தான். உண்மையில் சந்திரகுப்தன் என்னும் மௌரியனே அரசாளும் உரிமை பெற்றவன். உரிமை தவறியே நந்தன் ஆண்டு வந்தான். அவனுடைய கொடுமைகளைக் கண்டு சந்திரகுப்தனுடைய உள்ளம் துடித்தது.

மகத நாட்டை யாளும் நந்தர்கள் என்பார் யார் என்பதைப் பார்ப்போம். மகாநந்தி என்ற வேந்தன் மகதத்தைச் சிறந்த முறையில் ஆண்டுவந்தான். அவனுக்கு இரண்டு புத்திரர் உண்டு. மூரா என்ற இழி குல நங்கையையும் அவன்மணந்திருந்தான். இவளுக்குப் பிறந்த குழந்தையே மௌரியன். மகாநந்திக்கு மகாபத்மன் என்ற ஓர் உயிர் நண்பன் இருந்தான். இவன் தந்தை அரச வம்சத்தைச் சேர்ந்தவன். மகாபத்மன் தன் தாய்தந்தையர் இறந்ததும் வறுமை நிலை அடைந்தான். தொழில் செய்து பிழைத்து

வந்தான். இவன் தன் அரசனது நட்புக்குப் பாத்திர மாயினன். இவன் சூழ்ச்சியும் திறமையும் மிக்கவன். அரசனைத் தன் வயமாக்கினன். அரசன் படிப்படி யாகச் சேனாதிபதி முதலிய பதவிகளைக் கொடுத்து, இறுதியில் தன்னுடைய மந்திரியாகவும் இவனை ஆக்கிக்கொண்டான்.

மகாபத்மன் தன் சூழ்ச்சியால் அரசாட்சியைக் கவர நினைத்தான். அரசனையும், அவனுடைய பிள்ளை களையும் கொன்று விட்டான்; மௌரியன் அரசாட் சிக்கு உரிமையுடையவனல்லன் என்று சிலர் சொல்லக் கேட்டு, அவனையும் அவனைச் சேர்ந்தவரையும் விட்டு விட்டான். அரசனாகிய மகா நந்தியைக் கொன்றதும் மகாபத்மனே அரசனானான். நாட்டில் எதிர்ப்பு ஏற் பட்ட போதிலும் தன் திறமையால் அதை அடக்கிக் குடிகளுடன் அன்பாகப் பழகி அவர்களை தன்வயப் படுத்தி ஆண்டு வந்தான். ஆனால் சகடலன் என்ற அமைச்சன் இவனை எதிர்த்தான். அவ்வமைச்சனைக் கொன்று அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஓர் இடத் தில்இவனைபுதைத்துவிட்டான். இத்துணைத்திறனுடன் ஆண்டபோதிலும் இவனுடைய புத்திரர்கள் அத்து ணைச் சிறப்புடையவர்களாக இல்லை. இவன் இறந்த பின்னர் இவனுடைய முதல் மகனாகிய சுகற்பன் என்பானே ஆண்டுவந்தான். அவன் திறம் படைத்தவனல்லன். மக்களிடத்துப் பகைமை பூண்டவன். மக்கள் அவனுடைய கொடுங்கோலுக்கு அஞ்சி இருந்தனர்.

அவனுக்குச் சில உறவினர்களும் இராட்சசன் ஜீவசக்தி முதலிய அமைச்சர்களும் உற்ற துணையாய் இருந்து வந்தனர். மௌரியனுன சந்திரகுப்தனையே அரசிருக்கையில் அமர்த்தவேண்டும் என்ற எண்ண மானது மக்களிடையே இருந்து வந்தது. இவற்றைச் சுகற்பனும், அவனுடைய அமைச்சரும் அறிந்தனர். மௌரிய குலத்தையே ஒழிக்கத் திட்டமிட்டனர். கங் கைக் கரையில் ஒரு நிலவறை அமைத்து அதற்குள் சந்திரகுப்தனையும் அவனைச் சேர்ந்த நூறு மௌரிய வமிசத்தினரையும் அடைத்து இம்சித்தனர். சிறை யில் இருந்தவர்களுக்கு மிகக் குறைவான அளவுள்ள உணவே அளிக்கப்பட்டது. அவ்வுணவு அவர்களுக் குப் போதாத நிலையில் இருந்தது. அவ்வுணவைக் கொண்டு மௌரியர்கள் தாங்கள் அதிக நாட்கள் ஜீவித்திருக்க முடியாதென்று நினைத்தனர். உணவு பற்ருமல் இத்துணை மக்களும் இறப்பதைக் காட்டி லும் யாரேனும் ஒருவன் நன்ருக உண்டு, நந்த வம்சத்தை அழிக்கலாம் என்று தீர்மானித்தனர்.

பின்னர் அவர்கள் மௌரிய குலப் பெருமையை விளக்கச் சிறுவனுகிய சந்திரகுப்தனையே உயிர் வாழத் தேர்ந்தெடுத்தனர். தங்களுக்கு அளிக்கப்பட்ட உணவைச் சந்திரகுப்தனுக்கு அளித்து, உணவின்றி மாய்ந்தனர். ‘சந்திரகுப்தன் ஒருவன் இருக்கிருன். அவன் மௌரிய குலத்தை வாழ்விப்பான்’ என்ற நம் பிக்கை கொண்டே தங்கள் உயிரை இப்படித் தியாகம் செய்தனர் அப்பெருமக்கள். சில நாட்களுக் கெல்லாம் சந்திரகுப்தன் விடுவிக்கப்பட்டான். நந்தர்

களுக்குள் சந்திரகுப்தனை விடுவிப்பதா அல்லது கொன்றுவிடுவதா என்ற பிரச்னை எழுந்தது.

இராட்சசன் சந்திரகுப்தனை வெளியேற்றுவதைக் காட்டிலும் நம்மிடை வைத்துக்கொள்ளுவதே நலமென எடுத்துரைத்தான். அவனுடைய கூற்றின் படி சந்திரகுப்தன் அரண்மனைப் பணியாளனாக நியமிக்கப்பட்டான். சந்திரகுப்தன் அங்குப் பணியாற்றுங்கால் தனக்கு உற்ற சில நண்பர்களை அமைத்துக் கொண்டான். அவர்களுள் பகீரதன் என்பான் முதன்மையானவன்.

அக்காலத்தில் அரசர்கள் குறித்த நாட்களில் நான்மறையாளர்கள் முதலிய பேரறிஞர்களை வரவழைத்துப் பெருவிருந்து நடத்தினர்கள். அது போன்றே மகதநாட்டுக் கொற்றவனாகிய சுகற்பனும் விருந்திற்கு ஏற்பாடு செய்தான். விருந்துக்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். விருந்திற்காக ஒரு தனி மண்டபம் அமைக்கப்பட்டது. அம்மண்டபத்திற்குள் வருவதற்குப் பல வாயில்கள் அமைக்கப்பட்டன.

விருந்து நடத்துவதற்குப் பல பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் சந்திரகுப்தன் தலைமை தாங்கி, விருந்தினரை உபசரித்து வந்தான். நாடாளப் பிறந்த நம்பி விருந்துபசாரம் செய்தான். விருந்திற்கு வருவோர் யாவரும் சந்திரகுப்தனிடம்அநுமதிச்சீட்டுப் பெற்றுக்கொண்டே வர வேண்டும். மண்டபத்திற்குள் அழகிய பல ஆசனங்கள் இடப்பட்டிருந்தன. அரசர் முதலியோர் உட்காரப்

பொன்னலாகிய இலைகள் ஒன்பது இடப்பட்டன. மற்றவர் அமர வெள்ளி இலைகள் அமைக்கப்பட்டன. எட்டுப் பொன்னிலைகள் நந்தர்கட்கும், ஒன்பதாவது இலை, குலகுருவாகிய சுபபந்துவுக்கும் அமைக்கப் பட்டன.

விருந்தினர் தத்தம் இடங்களில் அமர்ந்தனர். சந்திரகுப்தன் விருந்தளிப்பதற்குள் ஒருமுறை எல்லோரையும் பார்வையிடவந்தனன். வாயிலின்புறத்தே பாதைகளின் வழியே சென்றான். ஒருவாயிலின்பாதை செப்பனிடப்படாத நிலையில் புற்கள் அடர்ந்ததாக விளங்கிற்று. அங்கே சந்திரகுப்தன் ஒரு காட்சியைக் கண்டான்.

கருமை நிறத்தோடு சிறிய வடிவமுள்ள ஒருவன் ஏதோ செய்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் விருந்திற்கு வரும் நேரத்தில் வாயிலின் அருகி லிருந்த புதர்களிலுள்ள புற்கள் அவனுடைய கால்களைச் சுற்றித் தடுத்தன. தட்டித் தடுமாறிக்கொண்டு கீழே உட்கார்ந்தான். அப்புற்களையெல்லாம் வேரோடு கல்லினான். சிலபுற்களைக் கசக்கி உண்டான். உடனே தண்ணீரை அருந்தினான். மறுபடியும் பாதையிலுள்ள புற்களைக் கல்லிக்கொண்டிருந்தான். இக் காட்சியைச் சந்திரகுப்தன் கண்டான். அவனருகில் சென்றான். அங்கு உட்கார்ந்திருப்பவனைப் பார்த்து, "அன்பரே! தாங்கள் யார்? தாங்கள் செய்யும் காரியங்கள் மிகவும் விந்தையாய் இருக்கின்றனவே! இப்புற்களை ஏன் கசக்குகின்றீர்கள்? அவை என்ன மூலிகையா? தயை செய்து கூறவேண்டும்" என்றான்.

புதியவன்: அன்பனே! உன் முகத்தில் அன்பு தாண்டவமாடுகிறது. இவ்வரசாட்சியில் உன் ஒருவனையே உறுதியும் உண்மையும் உடையவனாகக் காண்கிறேன். எனக்கு இடையூறு செய்த இப்புற்களை யான் வதைக்கிறேன். எனக்கு இடையூறு செய்பவர் யாராயிருப்பினும் அவர்களைச் சிதைப்பேன் என்பது உறுதி. நான் பல தேசங்கட்கும் சென்று, சகல நூல்களையும் பயின்று பல விருதுகள் பெற்றவன். இங்கே சந்திரகுப்தன் என்று ஒருவன் இருக்கிறானாம். அவன் விருந்துக்கு வருவோர்க்குச் சீட்டுக் கொடுக்கிறானாம். அவனைக் கண்டு அநுமதிச் சீட்டினைப்பெறவேண்டும். என் பெயர் சாணக்கியன் என்பது.

சந்திர: சாணக்கியரா! மிக வணக்கம். தங்களைப் பற்றி யான் கேள்வியுற்றிருக்கிறேன். தாங்கள் இப்புற்களைத் தோண்டுவதில் ஏதோ ஒரு புதுமை இருக்கிறதென்பதைக் காண்கிறேன்.

சாணக்: அன்பனே! முட்கள் அடர்ந்த வழியில் ஒரு முள் குத்தினாலும் ஏனைய முட்களை விட்டு விடுவதா? இன்று எனக்கு ஊறு செய்த இப்புற்கள் பிறரையும் வாட்டும் என்பது திண்ணம். நல்ல பயிர் விளைகின்ற காலத்திலே பூண்டுகள் பயிர்களை அழிக்கும். இப்பூண்டுகளை அகற்றுவது அவசியமே. அதுபோன்றுதான் உலகில் தீமைகள் மிஞ்சிய காலத்திலும் தீமையை அகற்றினால்தான் அறம் ஓங்கி வளரும். இச் சாணக்கியன் அறத்திற்கே பாடுபடுபவன். அறத்திற்கு மாறாக யார் நடந்தாலும் உடனே அவர்களைத் தண்டிக்கவேண்டியது முறையல்லவா?

சந்திர: அன்பரே! இனி யான் இங்கு இருக்கக் கூடாது. என் நண்பன் பகீரதன் தங்களை அழைத்துச் செல்வான். தாங்கள் உள்ளே வாருங்கள்.

சந்திரகுப்தன் நேராக உள்ளே சென்றதும் நண்பனாகிய பகீரதனிடத்தில், வெளியே இருக்கும் சாணக்கியனை உள்ளே அழைத்து வரும்படி கூறினன். சாணக்கியனுக்கு யாதொரு வருத்தமும் நேராதிருக்கும்படிப் பார்த்துக்கொள்ளச் சொன்னான். சாணக்கியனைப் பார்த்ததுமுதல் சந்திரகுப்தனுடைய உள்ளத்திலே உவகையும் ஒருவித அன்புணர்ச்சியும் தோன்றின.

## 3. சாணக்கியன் சபதம்

விருந்து மண்டபம் உயர்ந்த நிலையில் அமைந்திருந்தது. பரிகலங்களில் உணவு வகைகள் படைக்கப்பட்டன. அவரவர் தகுதிக்கேற்ப இடப்பட்ட ஆசனங்களில் யாவரும் அமர்ந்தனர். நந்தர்களின் குலகுரு சுபபந்துவும் வரும் நேரமாயிற்று. சந்திரகுப்தன் ஏவலின்படி பகீரதன் சாணக்கியனை உள்ளே அழைத்துச் சென்றான். சாணக்கியன் உள்ளே சென்றதும் ஆங்கு அமைக்கப்பட்ட பலதிறப்பட்ட பரிகலங்களையும் கண்டான்; பொன் இலைகளையும் நோக்கினான்.

அங்கிருந்த எட்டுப் பொன் இலைகள் நந்தர்கட்கு உரியது என்று அறிந்துகொண்டான். ஒன்பதாம் இலை யாருக்கென வினவினான். அங்கிருந்த மக்கள் அந்த இலை சகல கலா வல்லவராகிய பேரறிஞர்கட்கே உரியது என்று கூறினர். இக் கூற்றுக்களை கேட்ட சாணக்கியன் அந்த இலையின் அருகில் உட்கார்ந்தான். அங்குள்ளோர் சாணக்கியனை அவ்விலையில் உட்காரக் கூடாதென்று கூறித் தடுத்தனர். மேலும் அப்பொன் இலை அவைக்களப் புலவராகிய சுபபந்துவுக்கே உரியது என்று கூறினர். பிறகு அவனிடம் சீட்டிருப்பதைக் கண்டு அவனை வெள்ளி இலையில் அமருமாறு கூறினர்.

உடனே சாணக்கியன் அங்குள்ளோரை நோக்கி, யான் காசி, தக்ஷசீலம் முதலிய இடங்களில் பல கலைகளில் வெற்றி பெற்றுள்ளேன். என் பெயர் சாணக்கியன் என்பது. எனக்கே அந்த இடம்

உரியது என்று கூறினான். சாணக்கியன் பெரும் புதல்வன் என்று அவர்கள் அறிந்திருந்தாலும், அரண் மனைப் பணியாளர்கள் அப்புலவனை வெளியேறுமாறு வற்புறுத்திக் கூறினர். சாணக்கியனோ வாளா இருந் தான். யாவரும் யாது நிகழுமோ என்று அஞ்சி நின்றனர். சிலர் விருந்து தாமதமாவது குறித்து வருந்தினர். ஆனால் சாணக்கியன் உணவுக்குப் பயப்படவில்லை; உரிமைக்குப் போராடினான்.

அரசனின் வேலையாட்கள் மேலும் வற்புறுத்தி அவனை அவ்விடம் விட்டு அகலுமாறு கூறினர். சாணக்கியன் விடாப்பிடியாய் உட்கார்ந்துவிட்டான். மக்களுக்கு நீதி, சட்டம் இவற்றை எடுத்து உரைத் தான். ஆனால் பணியாட்கள் அரசனது உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அரசனும், குலகுருவும், ஏனைய உறவினரும் அவ்விருந்து மண்டபத்தை அடைந்த னர். அவர்கள் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்த னர். ஆனால் குலகுரு சுபபந்து தம்முடைய இடத்தில் அந்நியன் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டார். சாணக்கியனை வேறிடத்தில் அமருமாறு கூறினார். உடனே சாணக்கியன் சுபபந்துவை நோக்கி, "இந்த இடம் அறிவு நிறைந்த ஒருவனுக்கே உரியது. அதற்குத் தகுதி உள்ளவன் யானே" என்று கூறினன்.

உட்கார்ந்திருந்தவன் சாணக்கியன் என்பதை அறிந்த சுபபந்துவின் உள்ளத்தில் அச்சம் குடி கொண்டது. உடனே சுகற்பன் சாணக்கியனை அவ் விடம் விட்டு அகலுமாறு கூறினான். சாணக்கியனுக்

குச் சினம் மூண்டது. அரசனைப் பார்த்து, "என்னை விடக் கலையில் வல்லவர் எவரேனும் இருப்பின், என்னை இவ்விடம் விட்டகற்றுவது முறை" என்று கூறினான். சாணக்கியன் கூறிய மொழிகள் அரசனுக்குக் கோபத்தை ஊட்டின. உடனே அருகிலிருந்த இராட்சசன் சாணக்கியனைப் பார்த்து அரசனுடைய கோபத்திற்கு ஆளாகாமல் அவ்விடம் விட்டு அகலுமாறு கூறினான். அந்நிலையிலும் அகலாத சாணக்கியனை அரசன் தானே எழுந்திருந்து பிடித்துத் தள்ள, பணியாட்கள் அவனை வெளியே கொண்டுபோய்த் தள்ளினர்.

சாணக்கியன் வெளியில் புரண்டு விழுந்தனன். அவனது சிகைஅவிழ்ந்தது; உடலில் புழுதிபடிந்தது. அப்போது அவன் கொண்ட சினத்திற்கு எல்லையே இல்லை. அவன் கொண்ட சினமே ஒரு வஞ்சினக் கூற்றாக எழுந்தது. "இன்றுமுதல் யான் இந் நந்தர்களுடைய பரம வைரியாவேன். இவர்களை அடியோடு களைவது உண்மை. அறத்திற்குப் புறம்பாக நடந்த இவர்களது தலையை நிலத்தில் உருளுமாறு செய்வேன். என் கண்கொண்டு அவற்றைக் கண்ட பின்னரே, இப்போது அவிழ்ந்த என் சிகையை முடிப்பேன்" என்று கூறினான்.

இக் கூற்றுக்கள் அரசன் காதில் விழுந்தன. அரசன் அவனைத் தண்டிக்கச் சினத்துடன் எழுந்தான். அப்போது இராட்சசன் முதலியோர் அரசனைச் சாந்தப்படுத்தி அமர்த்தினர். அரசன் செயலைக் கண்ட அறத்தில் வல்ல சிலர் கண் கலங்கினர். இருப்பினும் அரசன் ஆணைக்கு அஞ்சி நின்றனர்.

இராட்சசன் உத்தரவுப்படி சாணக்கியன் மண்டபத்தின் வெளியே அனுப்பப்பட்டான்.

இந் நிகழ்ச்சிகளையெல்லாம் சந்திரகுப்தனுடைய நண்பனாகிய பகீரதன் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன நிகழுமோ என்று உள்ளம் துடித்தான். மெதுவாக எவரும் அறியாவண்ணம் சாணக்கியன் இருக்கும் இடத்தை அடைந்து அவனைச் சமாதானப்படுத்தினான். உடனே சாணக்கியனைப் பார்த்து, "அன்பரே! தங்கள் செயல் எனக்கு அச்சத்தை ஊட்டியது. தங்கட்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சி நின்றேன். தங்கள் வஞ்சினத்தால் சந்திரகுப்தனுக்கு நல்ல காலம் கிட்டும் என்று உணர்ந்தேன்" என்றான்.

சாணக்கியன்: அன்பனே! யான் எதையும் ஆராயாது செய்யமாட்டேன். உலகிலே அறம் என ஒன்று உண்டு. பகைவராயினும் அறத்திற்குச் சிறிது அஞ்சுவர்; அவர்கள் துணிந்து கொல்லார். அப்படித் தவறி விட்டாலும் யான் அஞ்சமாட்டேன். என் ஒற்றர்கள் எல்லா இடங்களிலும் யாரும் அறியாவண்ணம் தங்கியிருக்கின்றனர். இப்போதும் அவர்கள் என்னைக் கண்காணித்து வருகின்றனர். அவர்கள் இந்நாடு முழுமையும் நிறைந்து உள்ளனர். யான் விருந்து மண்டபத்தில் கூறிய உரைகள் பொய்யாகா. இந்நாட்டை ஆளப் பிறந்த நம்பி சந்திரகுப்தனே! நந்தர் முடியைச் சிதைத்துச் சந்திரகுப்தனைச் சக்கரவர்த்தியாக்குவேன் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அவனுடைய பகைவர்கள் எல்லோரையும் ஒழித்துக் கட்டுவேன்" என்றான்.

இம் மொழிகளைக் கேட்ட பகீரதனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது: அவன் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினன். உடனே, "அன்பரே! தாங்கள் கூறிய வாசகங்கள் எனக்கு மகிழ்ச்சியையும், உறுதியையும் ஊட்டுகின்றன. மௌரிய சாம்ராஜ்யத்திற்கே ஒரு நற்காலம் தங்களால் கிட்டுமென நினைக்கிறேன். யான் இப்போது சென்று விடவேண்டும். தாங்கள் இன்று மாலையில் சந்திர குப்தனுடைய இல்லத்திலேயே தங்கலாம். சந்திரகுப்தனும் அவ்வாறே கூறினன்" என்றான்: சாணக்கியன் அன்றைய இரவில் சந்திரகுப்தன் இல்லத்தை அடைந்தான்.

விருந்து மண்டபத்தில் சாணக்கியனுடைய நிகழ்ச்சிகள் எல்லாம் முடிவடைந்தது. யாவரும் உண வருந்தீச் சென்றனர். சந்திரகுப்தனுடைய உள்ளத்தில் வருத்தமும் கோபமும் மிகுந்தன. தன்னுடைய உயிர் போன்ற ஒருவனுக்கு ஏற்பட்ட அவமானச் செயல் அவனுடைய உள்ளத்தை வாட்டியது. அன்று இரவு சந்திரகுப்தன் சாணக்கியனைச் சந்தித்தான். தாய்தந்தையரைக் கண்ட தனயன்போல் சாணக்கியனைத் தழுவிக் கொண்டான். அன்று விருந்தில் நிகழ்ந்தவற்றிற்காக வருந்திக் கண்ணீர் வடித்தான். உடனே சாணக்கியன் அவனுக்கு ஆறுதல் கூறினன். தனக்காகப் பரிந்து வருந்த வேண்டாமென்றும், நன்மையை நாடுங்கால் பல தீமைகளை எதிர்க்க வேண்டியது அவசியம் என்றும் எடுத்து இயம்பினன். மேலும், "சந்திரகுப்த, நீ அஞ்சாதே! இன்று முதல் நாம் இந் நந்தர்களுக்கு நேர் எதிரிகளானோம். இவர்களே யன்றி உன்னுடைய வேறு பகைவர்களும்

அழிவர். இவைகளை யெல்லாம் யான் முன்னமேயே அறிந்தேன். உன்னைக் காக்கப் பல ஒற்றர்கள் எந் நேரத்திலும் இருப்பர். அவ்வொற்றர்கள் பல வேடங் கள் புனைந்து இருப்பர்: அவர்கள் பேசிக்கொள்வ தற்குப் பல குழூஉக் குறிகள் இருக்கின்றன; அவர் கள் இந்நாடு முழுமையும் பரவியுள்ளனர். ஆகையால் நீ எதற்கும் அஞ்சவேண்டாம்" என்று கூறினன்.

சந்திர: அன்பரே! எனக்குப் பேச நா எழவில்லை. யான் ஆற்றிய நல்வினைகளே தங்களுருவில் அமைந் திருப்பதாக கருதுகிறேன். தாங்கள் ஆற்றும் பணிகள் ஆபத்து நிறைந்திருப்பினும், என் உள்ளத் தில் அமைதியே ஏற்படுகின்றது. யான் இன்று முதல் தங்கள் சீடனுனேன்.

சாணக்: சந்திரா! யூகமாக ஆய்ந்து ஆற்றும் பணிகளும், அறச் செயல்களும் எனக்கு ஆபத்து விளைவிக்கமாட்டா என்பது உறுதி. உன்னைப்போல் இராஜகுமாரனுக்குக் குருவாக அமைவது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. ஆனல் ஒன்று; என்றும் அறத்தினின்றும் வழுவாதே.

சந்திர: அடிகளே! அப்படியே செய்வேன். இது உறுதி.

சாணக்கியன் தன் திட்டங்களை எல்லாம் பிறகு கூறுவதாகவும், சமயத்திற்குத் தகுந்தாற்போல் நடக்கவேண்டும் எனவும் கூறினன். இவற்றைக் கேட்ட சந்திரகுப்தன் சாணக்கியனைத் தற்சமயம் காப்பது கடமை என்று நினைத்தான்.

சந்திரகுப்தன், "அன்பரே! தாங்கள் இனி இங்கு இருந்தால் எப்படியும் ஆபத்து வரும். தாங்கள் இப்போதே செல்வது நலம். தாங்கள் விரைந்து செல்லுதற்குரிய குதிரை ஒன்று வெளியே காத்திருக்கின்றது. தாங்கள் அதன்மீது ஏறிச் செல்லுங்கள். நாம் விரைவிலேயே சந்திக்கலாம். தங்கள் வழிச் செலவுக்கு இந்தப் பொற் குவியல்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

பின்னர், சந்திரகுப்தன் கொடுத்த பொருள்களை எடுத்துக்கொண்டு சாணக்கியன் புரவிமீது ஏறிப் புறப்பட்டுச் சென்றான்

# 4. சந்திரகுப்தன் சிறைப்படலும் மீட்சியும்

சந்திரகுப்தனிடமிருந்து விடை பெற்றதும் சாணக்கியன் வெகு வேகமாகச் சென்ருன். மேற் கொண்டு சந்திரகுப்தனுக்கு என்ன என்ன ஆபத் துக்கள் வரும் என்பதை யோசனை செய்துவிட்டான். எப்படி அவனை அந்த ஆபத்துக்களினின்றும் காப் பாற்றலாம் என்று திட்டமிட்டுக்கொண்டே சென்ருன். அவனுடைய உள்ளத்தில் இரண்டே செய்திகள்தாம் குடிகொண்டிருந்தன. ஒன்று நந்த வம்சத்தை அடி யோடு அழிப்பது; மற்ருென்று சந்திரகுப்தனைக் காத்து மகத நாட்டிற்கு அதிபதி ஆக்குவது.

இவ்வாறு யோசனை செய்துகொண்டே இரண்டு நாட்கள் கொண்ட பயணத்தில் வர்த்தமானபுரம் என்ற ஊரினை அடைந்தான். சந்திரன் கொடுத்த பொருள்களைத் தன் செலவிற்கு உபயோகித்துக் கொண்டான். வர்த்தமானபுரத்தில் சாணக்கிய னுடைய நண்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் இந்துசர்மன் என்பதாகும். அவன் ஒரு சிறந்த வியாபாரி. மிகுந்த செல்வம் படைத்தவன். அவன் சாணக்கியனுடைய உயிர் நண்பனுக விளங்கினுன். சாணக்கியனுக்கு எந்தச் சமயத்தில் எதுவரினும் அதனை நீக்கித் தன் உயிரையே தியாகம் செய்யும் இயல்பினன். சாணக்கியன் வர்த்தமானபுரத்தில் இந்துசர்மன் வீட்டிலேயே தங்கினுன்; இருவரும் கலந்துகொண்டு மேலே செய்யவேண்டியவற்றைப் பற்றி ஆராய்ந்தனர். சாணக்கியன் தனக்கும்

சந்திரனுக்கும் ஏற்பட்ட நட்பைப்பற்றி எடுத்துக் கூறி விளக்கினன்.

இருவரும் சந்திரகுப்தனுக்கு ஆபத்து நிச்சயமாக நேரிடுமென்றும், அதனுல் அவனைக் காப்பது முறை என்றும் தீர்மானித்தனர். மேலும் நந்தனுடைய அரண்மனையிலேயே ஓர் அந்தரங்கமான ஒற்றனை அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டனர். உடனே இந்துசர்மன், "நண்பா, நந்தர்களுடைய அரண்மனையில் இருக்கும் ஒற்றன் நந்தர்களின் அழிவுக்காலம் வரை அங்கேயே இருக்கவேண்டும். அங்கே பெரும் பதவியை ஏற்று, அரசனை மயக்கிக் காரியங்களை முடிக்கவேண்டும். இப்பணியை நானே ஏற்கிறேன்" என்ருன்.

உடனே சாணக்கியன், "நண்பா! மிக்க மகிழ்ச்சி. இன்று முதல் நீ இந்துசர்மன் அல்ல: உன் பெயர் ஜீவசக்தி. புத்த மதத் துறவி ஒருவனைப் போல் நடித்து அரசனுடைய அந்தரங்கக் காரியங்களில் ஈடுபடுவாய்' ' என்று கூறினன்.

பின்னர் ஜீவசக்தி நேராக மகதநாட்டை அடைந்தான். முதலில் மந்திரிமார்களுடைய நட்பைப் பெற்ருன். தான் சாணக்கியனுடைய விரோதி என்று கூறிக்கொண்டான். இராட்சசன் முதலியோர் சாணக்கியனுடைய விரோதி ஒருவன் வந்திருக்கிருன் என்பதைச் சுகற்பனிடம் தெரிவித்தனர். அரசன் "சாணக்கியனுக்கும் ஓர் எதிரி இருக்கிருனே" என்று எண்ணி மகிழ்ந்தான். ஜீவசக்தி தனக்கும் சாணக்கியனுக்கும் உள்ள பகைமையை விளக்குவதற்காகச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறினன். "அரசே,

சாணக்கியன் சூனியத்தைச் செய்வதில் வல்லவன். பிறரைக் கெடுப்பதற்கே பிறந்தவன். இதோ! இந்தப் பாலைப் பாருங்கள். இதன் நிறம் மாறுபட்டிருக்கிறது. இவ்வாறு ஏற்பட்டதன் காரணம் அவனுடைய தீய மந்திரங்களே! அவன் தங்களுக்கு எப்பேர்ப்பட்ட கெடுதலையும் விளைவிக்கக் கூடும்'' என்று கூறினான். இதனைக் கண்ட அரசன் அஞ்சினான். ஜீவசக்தியை நம்பி அவனிடத்தில் செய்யவேண்டியவற்றைப் பற்றி ஆராய்ந்தான். ஜீவசக்தி, "கவலைப்பட வேண்டாம், நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றான். ஆனால் பாலில் பச்சிலையைக் கலந்து நிறத்தை மாற்றியமைத்தது ஜீவசக்தியேயன்றி வேறு யாருமல்லர். இது போன்று இன்னும் பல எடுத்துக் காட்டுக்களைக் கூறியும் விளக்கியும் அரசனை மயக்கிவிட்டான். ஜீவசக்தியின் மொழிகளில் அரசன் கட்டுண்டான்; ஜீவசக்தி சாணக்கியனுடைய சிறந்த எதிரியும் வைரியும் ஆவான். இவனைக் கொண்டு நாம் பல காரியங்களைச் சாதித்துவிடலாம். சாணக்கியனையே அழித்துவிடலாம். ஏன்! அவனுக்கு வேண்டியவர்கள் யாவரையும்கூட அழித்துவிடலாம் என்று தீர்மானித்தான். ஜீவசக்தியும் அப்பொழுதுக்கப்பொழுது அரசனுடைய உள்ளத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தாற்போல் நடந்து வந்தான். இராட்சசன் சுபுத்தி முதலிய ஏனைய அமைச்சர்களும் இவனை நம்பி விட்டனர். அரண்மனையில் இவனுக்குப் பெறும் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டன.

இதற்கிடையில் சாணக்கியன் சந்திரகுப்தனை விட்டுப் பிரிந்தவுடன் யாதாயிற்று எனப் பார்ப்போம்.

சாணக்கியன் விருந்து மண்டபத்தினின்றும் வெளியேற்றப்பட்ட அன்று இரவு சந்திரகுப்தன் வீட்டில் தங்கியதையும், அதற்கு முன் சாணக்கியனுடன் சந்திரகுப்தன் பேசிக்கொண்டிருந்ததையும் சில ஒற்றர்கள் சென்று மந்திரி முதலியோரிடம் எடுத்துரைத்தனர். அரசனும் இவற்றை அறிந்தான். இராட்சசன், தனநந்தன், சுபுத்தி, அரசன் முதலியோருக்குச் சந்திரகுப்தனிடத்தில் ஐயுறவு ஏற்பட்டது. சாணக்கியன் வந்து சென்றது மேலும் அவர்கட்குக் கலக்கத்தை உண்டு பண்ணிவிட்டது. ஜீவசக்தியும் சாணக்கியனைப் பற்றித் தூண்டுகோல் போட்டுக்கொண்டே இருந்தான்.

சந்திரகுப்தனை என்ன செய்வது என்ற ஆராய்ச்சி எழுந்தது. தனநந்தன், இராட்சசன், சுபுத்தி முதலியோர் கூடினர். நந்தர் மந்திரிகளுள் இராட்சசன் கூரிய அறிவுடையவன். காரியங்களை ஆராய்ந்து சாதிக்க வல்லவன். இவனுடைய சூழ்ச்சித் திறன் முதலியவற்றைச் சாணக்கியனுக்கு நிகராகக்கூடக் கூறலாம். ஆனால் இவன் இருப்பது நந்தன் அரசாட்சியின் கீழ் அல்லவா? 'யார் கீழ்ப் பணி புரிகிறோமோ அவரிடம் கடமையுணர்ச்சியுடன் பணியாற்றுதல் வேண்டும்' என்ற குறிக்கோளுடன் விளங்குபவன். ஆனால் சுபுத்தி, தனநந்தன் முதலியோர் எதையும் செய்யும் நெஞ்சுரம் படைத்தவர்கள். சாணக்கியனுடைய செயல்களைக் கண்டு அவனை ஒழிப்பதற்கே வழிதேடினர். அவர்கள் சாணக்கியனுடைய அறிவு, பெருமை இவற்றை ஆராயவில்லை. அப்போது சுபுத்தி கூறினான்: "அரசே! சாணக்கியனுடைய செயல்களையும் மர்மங்களையும் யாம் அறிவோம். இந்

நிலையில் அவனுக்கு அந்தரங்கமாக ஒருவன் துணையாக இருந்தால் அவனையும் அழிக்கவேண்டியது நம் கடமை. முக்கியமாக, நம்முடைய குலகுருவாகிய சுபபந்துவைஅவன் விருந்து மண்டபத்தில்அவமானப் படுத்தியதே நமக்கு வருத்தம் ஊட்டுகிறது.

இராட்சசன்: அரசே! ஒன்று சொல்கிறேன்; கேட்க வேண்டும். அறிவுக்கு இடம் அளிக்க வேண்டாமா? குலகுரு என்றால் முதல் இலையில் உட்கார்ந்து உண்டால் மாத்திரம் போதுமா? அது பெருமை அளிக்கக் கூடியதா? நம் குலகுரு அரசாட்சிக்காக ஆற்றும் நன்மை யாது?ஆனால் சாணக்கியனை நோக்குவோம்; அவன் அரசியல் துறையை விளக்கி எழுதியுள்ள அர்த்த சாஸ்திரம் என்ற ஒரு நூலே எத்துணை பயன் அளிக்கும் என்பது அந்நூலை ஆராய்ந்து பார்ப்பவருக்கு விளங்கும். இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

சுபுத்தி: பேரமைச்சர் எடுத்துச் சொல்லிய கூற்றுக்களை யெல்லாம் ஏற்றோம். தாங்கள் ஒரு சிறந்த அறிவாளி. ஆகவே, மற்றும் ஓர் அறிஞனைத் தாங்கள் புகழ்வது இயற்கையே. ஆனால் நாம் இப்பொழுது ஆற்றவேண்டிய காரியங்கள் என்ன? நம் அரசராகிய சுகற்பரைக் காக்கவேண்டியதா? மௌரியனாகிய சந்திரகுப்தனை அரியணையில் ஏற்றுவதா? நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்..! இராட்சசர் கூற்றின்படி சாணக்கியனையே ஏற்கலாம். ஆனால் அவன் யாருக்கு உதவிசெய்வான் என்பதையும் ஆராயவேண்டும். சாணக்கியனுடைய அந்தரங்கமான

எண்ணம் என்னவென்பதை உறுதியாகக் கூறுவேன். சாணக்கியன் சந்திரகுப்தனை அரியணையேற்றுவது என்ற ஒரே குறிக்கோளுடன் விளங்குகிறான். இதில் ஐயமே இல்லை. இவற்றையெல்லாம் அறியும் பொழுது நாம் சந்திரகுப்தனுடைய செயல்களைக் கவனித்துவர வேண்டுமென்று விளங்குகின்றது. அவனிடம் யாரையும் அண்டவிடக்கூடாது. இந்த நிமிடமே அவனைச் சிறைசெய்ய வேண்டுவது மிக அவசியம்.

சுபுத்தியின் கூற்றுக்கள் சபையில் இருந்த எல்லோருக்கும் கலக்கத்தையும் அதிர்ச்சியையும் உண்டு பண்ணிவிட்டன. அரசன் யோசனையில் ஆழ்ந்து விட்டான். ஏன்? அறிவுரை கூறிய இராட்சசனே உளம் மாறிவிட்டான் சந்திரனைச் சிறையில் அடைக்கவேண்டும் என்று தீர்மானித்தனர். சந்திரகுப்தன் அரசன் முன் கொணர்ந்து நிறுத்தப்பட்டான். அந்நியனும் விரோதியுமாகிய சாணக்கியனுடன் உறவாடி உதவி புரிந்ததாகச் சந்திரகுப்தன் மேல் குற்றம் சாற்றப் பட்டது; சந்திரகுப்தனைச் சிறையிலிட அரசன் உத்தர விட்டான். சந்திரகுப்தன் நிலவறைஒன்றில்அடைக்கப் பட்டான். சந்திரகுப்தன் சிறைப்பட்டாலும்அப்பொழு தப்பொழுது ஆதரவு அளிக்கவும், எந்த நேரத்தில் ஆபத்து வந்தாலும் காக்கவும், ஜீவசக்தி அந்தரங்க மாகக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துவந்தான்.

சந்திரகுப்தன் சிறையில் இருந்தபடியே அப் பொழுதப்பொழுது நடப்பவற்றைத் தன் ஒற்றர்கள் மூலம் கவனித்து வந்தான். இச் சமயத்தில் சாணக்கியன் எப்படியும் தன்னைக் காப்பாற்றக் கூடும் என்ற உறுதியோடு இருந்தான்.

ஒரு நாள் காலை ஒரு வியாபாரி துணி முதலிய பொருள்களை ஒரு வண்டியில் ஏற்றி விற்றுக்கொண்டு வந்தார். அந்த வண்டி சந்திரகுப்தன் அடைபட்டிருக்கும் வழியே வந்தது. சில கண நேரங்களில் அந்த வியாபாரியுடன் மற்றொரு வியாபாரி உட்கார்ந்திருந்தார். வண்டி நேராகப் புறப்பட்டு ஊர்கடந்து சென்றுவிட்டது. அந்த வியாபாரி யார்?

சந்திரகுப்தனுக்கு எப்படியும் ஆபத்துக்கள் வரக்கூடும் என்று சாணக்கியன் எதிர்பார்த்திருந்தான். சாணக்கியனுக்கு சித்தன் என்ற ஒரு நண்பன் இருந்தான். அவன் சிறந்த ஒற்றன். சாணக்கியன் அவனுடன்கலந்து யோசித்து, சந்திரகுப்தனைக் காத்து வருமாறு ஏவினான். அந்தச் சித்தனே துணிவியாபாரியாக வேடம் தரித்துச் சந்திரனைச் சிறையினின்றும் காப்பாற்றினான். வண்டியில் சித்தனுடன் வந்த வியாபாரி வேறு யாரும் அல்லன்; சந்திரகுப்தனே.

சந்திரகுப்தனும், சித்தனும் எவ்விதமோ சாணக்கியன் இருந்த வர்த்தமானபுரத்தை அடைந்தனர். சந்திரகுப்தன் தப்பித்துச் சென்றது மகத நாட்டிலேயே ஒரு பரபரப்பை உண்டு பண்ணிற்று. நந்தனுடைய ஆட்சியை வெறுத்தோருடைய உள்ளம் உவகைக் கடலில் ஆழ்ந்தது. இராட்சசன் முதலியோர் கோபத்தால் துடித்தனர். ஜீவசக்தியும் எரியும் விளக்கில் எண்ணெயை ஊற்றி வந்தான். அரசன் மன அமைதி இழந்தான். சந்திரகுப்தனைப் பிடித்துக் கொடுப்போருக்கு நிறையப் பொன் கொடுப்பதாகப் பறை சாற்றினான்.

# 5 அறிவின் அருஞ்செயல்

மகத நாட்டை விட்டுச் சந்திரகுப்தன் மறைந்தான் என்ற செய்தி நாடெங்கும் பரவியது. சுகற்பன் சந்திரகுப்தனைப் பிடிப்பதற்குப் பல இடங்களிலும் ஒற்றர்களை அனுப்பினான். சந்திரகுப்தனைத் தேடிக் கொண்டு, நந்தனுடைய ஆட்கள் பல இடங்களை நாடினர். அவர்கள் சில பேர்களைப் பார்த்துச் சந்திரகுப்தன் என்று ஐயுற்றனர். ஆனால் உறுதியாகச் சொல்ல முடியாமல் திகைத்தனர்.

மகத நாட்டை விட்டுத் தப்பிய சந்திரகுப்தன், சித்தனைத் துணையாகக் கொண்டு நெடுந்தூரம் பிரயாணம் செய்து, பிறகு வர்த்தமானபுரத்தை அடைந்தான். உயிர்த் தலைவனாகிய சாணக்கியனைக் கண்டான். சாணக்கியன் சந்திரகுப்தனைப் பார்த்ததும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தான். சந்திரகுப்தன் சாணக்கியனைக் கண்டதும் தாயைக்கண்ட சேயெனத் திகழ்ந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். அக்கணத்திலேயே நந்தர்களுடைய அழிவினைப்பற்றித் திட்டம் வகுக்கத் துவங்கினர். முதல் முதலாகத் தங்களுடைய அந்தரங்கமான வரலாறுகளையும் தங்கள் கருத்துக்களையும் கூறிக் கொண்டனர்.

சாணக்கியன்: சந்திரகுப்தா! நீ இன்று முதல் என்னுடனேயே இருக்கவேண்டும். என்னுடைய பணி என்னவெனில் சூழ்ச்சிமேல் சூழ்ச்சி செய்து உன் பகைவர்களை ஒடுக்கி, இறுதியில் உன்னை மகத ஆட்சியின் அரசனாக ஆக்குவதேயாகும். இவற்றை

நான் உறுதியாகக் கூறுவேன். அன்று உன்னுடன் நான் பேசும்போது என் கொள்கைகளையும் வரலாறுகளையும் கூற இயலவில்லை. ஒரு சில இப்பொழுது விளக்கிக் கூறுகிறேன். இந்த நாட்டில் எனக்கு அந்தரங்கமான ஒற்றர்கள் இருக்கின்றனர். அவர்கள் சூழ்நிலைகட்குத் தகுந்தாற்போல் தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளுவார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வதற்குரிய குறிப்பு மொழிகள் இருக்கின்றன. அக்குறிகளை என்னுடைய ஆட்களேயன்றி வேறு ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது. நீயும் அக்குறிப்பு மொழிகளைப் பயின்றுகொள்ள வேண்டும். என்னுடைய ஒற்றர்களின் நோக்கமெல்லாம் அறத்தின் வழியே செல்லும். இவ்வாறு செய்வதன் நோக்கம் என்ன? ஒரு நாடு உயர்ந்த நிலையில் அமையவேண்டுமானல் அந்நாட்டில் அறப்பயிர் தழைத்து ஓங்கவேண்டும். அந்நிலையில் தவறிவிட்டால் அந்நாடு கடும்புலிவாழும் காட்டிலும் கடுமையாக இருக்கும். நாட்டின் நன்மை தீமைக்குக் காரணமாக இருப்பவன் அரசனேயல்லவா? அரசன் அறநிலையில் தவருது அருமதியமைச்சருடன், மக்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, குடிகளின் தாயாய் விளங்கவேண்டும். அவ்வாறு விளங்கும் நாடே நாடு. அறத்தின் வன்மையைப் பயக்கும் அரசியல் முதலியவற்றைத் தொகுத்து எழுதப்பட்டதே யான் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்னும் பொருள் நூல். நந்தனுடைய அரசாட்சியின் கொடுமைகளை உணர்ந்தே மகத நாட்டில் நுழைந்தேன். முதற் காட்சியாக

விருந்து மண்டபத்தில் தோற்றமளித்தேன். அன்று அங்கே நிகழ்ந்த செயல்களே நந்தனின் இழிவினைப் புலப்படுத்திவிட்டன. அப்பொழுதே நந்தன் என் வைரியானான்; அவனை ஒழித்து உன்னைச் சிம்மாசனத்தில் ஏற்றுவது என்று தீர்மானம் செய்துகொண்டேன். இனி நாம் நம்முடைய திட்டங்களை வகுப்பதற்கு முன் உன் வரலாறுகளையும் கூறவேண்டும்.

இம் மொழிகளைக் கேட்ட சந்திரகுப்தன் "இப்போது எனக்குப் பேசவே நா எழவில்லை. என்று யான் தங்களைக் கண்டேனோ அன்று முதல் யான் தங்கள் சீடனாகிவிட்டேன். தாங்களே என் குலகுரு. இவையெல்லாம் என் நல்வினையேயன்றி வேறல்ல, தாங்கள் கூறும் ஒவ்வொரு மொழியும் எனக்குப் பொன்மொழியாகத் தோற்றம் அளிக்கின்றது. தாங்கள் கூறிய அறவுரைகளையெல்லாம் உறுதியாகக் கடைப்பிடிப்பேன். தாங்கள் என்னுடைய வரலாற்றையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்" என்றான்.

பின்னர், சந்திரகுப்தன் மௌரியர்களுடைய வரலாறுகளையெல்லாம் முறையே எடுத்துரைத்தான்: தான் அந்த மௌரியர்கட்குள் இளையவனென்றும், நந்தன் மௌரியர்களைச் சிறைசெய்த வரலாற்றையும், தன்னை மௌரியர்கள் காப்பாற்றியதையும், பின் நந்தனிடத்தில் தான் பணியாளாகிய வரலாற்றையும் முறையே எடுத்துக் கூறினான்.

இவற்றோடன்றி இழிகுலத்தில் தோன்றிய மகாபத்மன் வரலாற்றையும், அவன் சூழ்ச்சியால்

அரசனைக் கொன்ற செய்தியையும். அவன் மகனே சுகற்பன் என்பதையும் கூறினன். பிறகு சுகற்பன் தன்னைப் பணியாளனுக்கிக் கொண்டதற்குக் காரண மாகியதொரு வரலாற்றையும் கூறினன்.

மகத நாட்டைச் சார்ந்த சிங்கபுரம் என்ற ஓர் ஊர் உளது. அவ்வூர் அரசன் ஒரு கூட்டினுள் சிங்கம் ஒன்றினை அடைத்து அக் கூட்டினைத் திறவாமல் சிங்கத்தினை வெளியேற்றுவோரே சிறந்த பேரறிஞர் என்று பறை சாற்றினன். கூட்டினுள் சிங்கம் அங்கு மிங்கும் உலாவும் நிலையில் இருந்தது. சந்திரகுப்தன் இப் பணியை ஏற்கத் தலைப்பட்டான். கூட்டில் இருக் கும் சிங்கத்தைக் கண்டான். உண்மையை உணர்ந் தான். ஓர் இரும்புக் கம்பியை பழுக்கக் காய்ச்சிக் கூட்டினுள் இட்டான். சிங்கம் உருகி ஓடிற்று ஏன்? அது மெழுகினுல் ஆக்கப்பட்ட பொறியே யன்றி வேறன்று. இதை நுணுக்கமாக அறிந்திருந் தான் சந்திரகுப்தன். அவன் புகழ் வெளிப்பட்டது.

இவற்றைக் கருதியே நந்தன் சந்திரகுப்தனைத் தன்னுடன் வைத்துக் கொண்டான். மேலும் மௌரியர் தலைவன் இருக்கும்போது இரகசியமாய் வைத்துவிட்டுப் போயிருந்த பொற்குவியல்களையும் சந்திரகுப்தனுக்கு ஈந்தான். அந்நிலையில்தான் தன்னைச் சாணக்கியன் வந்து அடைந்தான் என்று அவ் வரலாற்றைக் கூறி முடித்தான் சந்திரகுப்தன்.

சந்திரகுப்தனும் சாணக்கியனும் வர்த்தமான புரத்தில் மேற்கொண்டு செய்யவேண்டிய திட்டங் களை நன்கு வகுத்துக்கொண்டனர். இந்த நிலையில்

ஜீவசக்தி அவர்களுக்கு மகத நாட்டில் நிகழும் செயல்களை அப்போதப்போது அறிவித்துக்கொண்டிருந்தான். அரசன் சுகற்பனுடைய செயல்களை உள்நாட்டு மக்களிற் சிலர் வெறுக்க ஆரம்பித்தனர். மக்களுக்கு மிகுதியான வரிகள் போடப்பட்டன. நாட்டிற்கு உறுதுணையாய் விளங்குவது படை; அப் படைகட்குச் சரிவர ஊதியம் கொடுக்கப்படவில்லை. இவற்றால் சிறு குழப்பங்கள் உண்டாயின. ஜீவசக்தி ஒரு கணமும் விடாமல் செய்திகளைச் சாணக்கியனுக்குத் தெரிவித்துக்கொண் டிருந்தான். மகதநாட்டில் பேரறிஞர் பலர் சுகற்பனை வெறுத்தனர்.

இவற்றைக் கேள்வியுற்ற சாணக்கியனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சியும் தைரியமும் ஏற்பட்டன. சந்திரகுப்தனிடம் மகதநாட்டில் படைகளின் மூலம் எப்படி நுழைவது என்பது பற்றியும், படைகளைத் திரட்டி அமைதற்குரிய வழிபற்றியும் கூறினான்.

சந்திரகுப்தன், 'தாங்கள் பொருளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால் படைகளைச் சேகரிப்பது எப்படி? இராட்சசன் யூகம் படைத்தவன். நாம் படை அமைப்பதை அவன் அறிந்து, எப்படியும் நம்மை அகப்படுத்தக் கூடுமே" என்றான்.

உடனே சாணக்கியன், "அஞ்ச வேண்டாம்! இராட்சசனுடைய சூழ்ச்சிக்குச் சூழ்ச்சியாய் நாம் விளங்குவோம். இப்போது படைகளைச் சேகரிப்பதற்குரிய வழிகளைத் தேடுதல் வேண்டும். சிங்கபுரத்து அரசன் உன் பெருமையைப்பற்றி அறிந்திருக்கிறான். மெழுகினால் ஆகிய சிங்கப் பொறியைக் கூட்டினின்று

நீ வெளியேற்றியது முதல் உன்னுடைய யூகத்தை அவன் மெச்சிக்கொண்டிருப்பதாக ஒற்றர் மூலம் எனக்குச் செய்தி கிடைத்திருக்கின்றது. அவனைத் தந்திரமாக நண்பனைகப் பெறலாம் அதற்குமுன் அவனைவிட வலிவுள்ள ஒருவனுடைய நட்பை நாம் பெறவேண்டும். சீலம் நதிக்கரையில் பர்வதேசுவர னுடன் அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க மன்னன் தங்கியிருக்கின்முன். அவன் மகத நாட்டுடன் போருக் குச் செல்லவில்லை. அலெக்ஸாண்டர் பெருந்தன்மை வாய்ந்தவன் என்று அறிகிரும். அவனுடைய நட்பைப் பெற்றுக்கொள்வோம். பொருள் கொடுப்ப தாகக் கூறி அவனிடமிருந்து சில படைகளைப் பெற்றுக்கொள்வோம்'' என்முன்.

சந்திர: அன்பரே! தாங்கள் கூறும் திறமான மொழிகள் எனக்குச் சிறந்த ஆறுதல் அளிக்கின்றன. ஆனால் அந்நியர் உதவியை நாடுவதில் சில இடை யூறுகள் உள்ளன. மேலை நாட்டு மன்னனை அலெக் ஸாண்டருடைய உதவியை நாடினல் அவன் நமக்கு உதவி செய்வதுபோல் நம் நாட்டையும் பிடிக்கக் கூடுமே!

சாணக்: இதற்கு நீ பயப்பட வேண்டாம். நம் நாட்டு மன்னர்கள் கோழைகளல்லர். அலெக் ஸாண்டர் நமக்கு விரோதமாக எழுந்தால், நாம் மற்றைய வேந்தர்களின் துணைகொண்டு அவனை வெல்லலாம். அதற்கு உரிய சில சூழ்ச்சிகள் இருக் கின்றன. இனி இந்த வர்த்தமானபுரத்தை விட்டு நாம்

கிளம்பிவிடவேண்டும். ஆனால் நாம் மாறு வேடத்தி லேயே விளங்க வேண்டும்.

சந்திரகுப்தன் சிறந்த வீரனாக இருப்பினும் வர்த்தமானபுரத்தைவிட்டுப் புறப்படச் சிறிது தயங்கினான். உடனே சாணக்கியன் அவனைப் பார்த்து, "நீ பயப்படும் காரணங்களை யான் அறிவேன்; நீ வீரன் என்பதில் ஐயமில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாக இல்லை. நந்தனுடைய ஒற்றர்கள் வட்டமிடுகின்றார்கள். அவர்கள் கையில் சிக்கிவிடக்கூடும் என்று நீ அஞ்சுகிறாய். அதற்காக நீ கவலைப்பட வேண்டாம். உன் கண்ணெதிரே என் ஒற்றர்கள் நிற்பார்கள். கடுமையான ஆபத்து வரும்பொழுது திடீரென்று உய்வதற்கு உரிய வழிகள் எல்லாம் உண்டு. ஆகையால், யான் கூறும் மொழிகளின் படியே நடந்துவந்தால் இறுதியில் உறுதியாக வெற்றி பெறுவாய். பெரிய பணிகளைச் செய்யுங்கால் பெருந் தடைகள் எல்லாம் நேரிடும். அவற்றை எதிர்த்துச் செல்வதே வீரர்க்கு அழகு. அவ்வாறு இடையில் ஏற்படும் இன்னல்களை ஏற்றும், கடந்தும் வெற்றி பெறுபவனே வீரனாவான். ஆகையால் இப்பொழுதே இவ்விடத்தைவிட்டுக் கிளம்பிவிட வேண்டும். நமக்கு நந்த அரசனிடமிருந்து செய்திகளை அனுப்புவதற்கு ஜீவசக்தி இருக்கிறான். ஜீவசக்தியின் மூலம் அப்பொழுதப்பொழுது நடக்கும் செய்திகள் எனக்குத் தவறாமல் கிடைக்கும். இப்பொழுது நாம் செல்ல வேண்டியது மகத நாட்டின் எல்லைக்கேயாகும். அங்கேதான் சீலம் நதிக்கரையில் அலெக்ஸாண்டர்,

பர்வதேசுவரன் அரண்மனையில் தங்கியிருக்கிறான். அங்கு ஆபத்தின்மேல் ஆபத்தாய் வரலாம். ஆனால் அவற்றினின்றும் எளிதில் உய்யலாம்" என்று கூறினான்.

அம்மொழிகளைக் கேட்ட சந்திரகுப்தன், யான் நந்தனுக்கு அஞ்சவில்லை. நம்முடைய மாறுவேடத்தால் இடையூறு ஏற்படுமோ என்று பயந்தேன். "என்னுடைய வெற்றிக்குத் தாங்கள் என்னுடைய இரு புயங்களாகவும் உயிராகவும் விளங்கும்பொழுது எனக்கு ஏன் கவலை!" என்று கூறினான். பிறகு இருவரும் வர்த்தமானபுரத்தை விட்டுப் புறப்பட்டுக் கால் நடையாக மகதநாட்டு எல்லையை நோக்கி நடந்தனர்.

## 6. சூழ்ச்சியின் வெற்றியும் மணமும்

வெற்றிமேல் வெற்றிகொள்ள எண்ணினான் சந்திரன். ஆனால் இப்பொழுது கொண்ட வேடமோ அந்தண வடிவு. அரும்பெருந்திறனைக் காட்ட நினைத் தான் சாணக்கியன். ஆனால் அவன் கொண்ட வேடமோ ஒரு சீடன் உருவம். குருவாகவும் சீடனாக வும் காட்சி அளித்துக்கொண்டு இருவரும் புறப் பட்டனர். தொலைதூரம் கடந்ததோடு பெருந்துன்பங் களையும் கடந்தேகினர். ஏன்? நந்தர்களுடைய ஒற்றர் கள் அங்கங்கே கண்காணித்து வந்ததாலேதான்.

இடை வழியில் அந்தண வடிவுடைய சந்திரனைக் கண்டு ஐயுற்றான் ஓர் ஒற்றன். பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். அருகே நெருங்கினான். அருகில் நிற்கும் சீடன் அவனை எளிதில் அண்டவில்லை. அவ் வொற்றனைத் தன் வயப்படுத்தினான். அவனைப் புகழ்ந் தான். ஒற்றன் மயங்கிவிட்டான். அந்தணனாகிய சந்திரன் நழுவினான். சீடரும் குருவுமாகிய சாணக்கிய னும் சந்திரகுப்தனும் அவ்வின்னல்களைக் கடந்து சென்றனர். பின்னர்ப் பல காதங்கள் பலவித மாறு வேடங்களுடன் சென்றனர். ஒரு காட்டினைத் தாண்டி ஒரு நகரை அடைந்தனர். நகர் வழியே வரும்பொழுது இவர்களைப் பல ஒற்றர்கள் பின் தொடர்ந்தனர். அவர்களினின்றும் உய்யவேண்டிய வழிகளைப்பற்றி நினைத்துக்கொண்டே சென்றனர். திடீரென்று பாம் பாட்டிகளாக மாறினர். ஒற்றர்கள் அவர்களைத் தேடி வந்தனர். இரண்டு பாம்பாட்டிகளையும் கண்டு

ஐயுற்றனர். உடனே அவ்விருவரும் பாம்பினைப் பெட்டியினின்றும் அவிழ்த்துவிட்டனர். கூட்டத்தில் உள்ள மக்கள் கலைந்துஓடினர். இவர்களும் மாயமாய் மறைந்தனர். இவ்வாறு பல இன்னல்களைக் கடந்து மகத நாட்டின் எல்லையை அடைந்தனர்.

மகத நாட்டின் எல்லையாகிய இந்திரபிரஸ்தம் என்னும் இடத்தை அணுகினர். அங்கு மகத வேந்தனைப் பற்றிய பல செய்திகள் சாணக்கியனுக்கு எட்டின. சந்திரகுப்தனுக்கு அந்தரங்க நண்பனுன ஒருவனைச் சாணக்கியன் அங்கே காண நேர்ந்தது. அவன் நந்தனுடைய ஆட்சியில் பணி பூண்டிருப்பினும், சந்தரகுப்தனிடத்திலேயே கருத்தைச் செலுத்தியுள்ளான் என்பதைச் சாணக்கியன் அறிந்தான். அவன் ஆதரவைப் பெற்று அங்கே மறைவாகத் தங்கினர். இருவரும் மகத நாட்டு மன்னன் குடிகளுடைய வெறுப்புக்குக் காரணமாயினன் என்பதை அறிந்துகொண்டனர். சாணக்கியன் மகத நாட்டு மக்கள் நிலையை அறிந்ததோடு நிற்கவில்லை. வேறு சில அரிய செய்திகளையும் கேள்வியுற்றான். அலெக்ஸாண்டர் தன் நாட்டிற்குச் செல்லாமல் பர்வதேசுவரனுடன் தங்கியிருக்கும் மர்மத்தை அறிந்து கொண்டான். மகத நாட்டின் செய்தியைக் கேள்வியுற்ற அலெக்ஸாண்டர் மகதத்தை விடுத்துச் செல்லுவானு? மகத நாட்டில் ஒரு கண்ணுகவே இருந்தான். அவற்றேடு அமையாது அலெக்ஸாண்டருக்கு நந்தர் கப்பம் கட்டும்நிலை வந்தது. அந்தக் கப்பப் பொருளைப் பர்வதேசுவரன் பெற்று வந்தான். அதனல் அவன் தன்னைப் பெருமையுடையவனுக மதித்து அக்

கப்பப் பொருளைத் தனக்கே நந்தர்கள் கட்டுவதாக நினைத்து வந்தான். மகத நாட்டில் சில குடிகட்கு நந்தனிடம் வெறுப்பு ஏற்பட்டபோதிலும், அந்நிய ணகிய கிரேக்க மன்னனை உள்ளே விடாமல் காப்ப தற்குத் தயாராக இருந்தனர். மகத மக்களின் நாட்டுப் பற்றைக் கேள்வியுற்ற சாணக்கியனுக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று. அதே சமயத்தில் சுகற்பன் நந்தனுடைய நிலையையும் ஆராய்ந்தான். அப்பொ ழுதப்பொழுது நந்தர்களைப்பற்றிய பல செய்திகளும் ஜீவசக்தி மூலம் கிடைத்து வந்தன. நந்தன் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தான். 'இருதலைக் கொள்ளி எறும்பு போல்' துடித்தான். மகத எல்லையை அலெக் ஸாண்டர் கைப்பற்றி விடுவானே என்ற கவலைதான்! பர்வதேசுவரன் பொருளாசை பிடித்தவன்; அவன் அலெக்ஸாண்டருடன் படையெடுக்கக் கூடுமோ என்று ஐயுற்றுப் படைப் பலத்தைத் திரட்டி அமைத் துக்கொண்டிருந்தான் நந்தன். அண்மையில் உள்ள சிங்கபுரத்து வேந்தனும் பர்வதேசுவரனுக்கு உறவி னன். அவனாலும் நந்தன் மனம் வாடினன். இவை யெல்லாம் அன்றி இடி முழக்கம் போன்ற பெருங் கவலையொன்று நந்தனது உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தது. அது, சந்திரகுப்தன் ஒருவர் கண்ணுக்கும் புலனாகாமல் மறைந்திருந்ததே யாகும். இராட்சசன் அரும்பாடுபட்டுச் சந்திரனைக் கண்டு பிடிக்க முயன்றான். சாணக்கியனைப்பற்றிய செய்திகள் மட்டும் கிடைத்தனவேயன்றி வேறொன்றும் தெரிய வில்லை. இவற்றோடன்றி ஜீவசக்தியும் அப்பொழுதப் பொழுது கலகத்தை உண்டுபண்ணிக் கொண்டே

இருந்தான். இவற்றை யெல்லாம் கருத்தில்கொண்டு நந்தன் மிக ஜாக்கிரதையாக இருந்து வந்தான்

இந்நிலையில் திடீரென ஒரு செய்தி கிளம்பியது. சந்திரகுப்தன் காட்டில் உறங்கும்பொழுது அவன் அருகில் ஒரு சிங்கம்வந்து ஊறுபாடுஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டு மறைந்ததாகச் செய்தி எட்டியது. இது சாணக்கியன் தன் ஒற்றர்மூலம் பரப்பிவிட்ட செய்தியே யன்றி வேறல்ல. சந்திரகுப்தனுக்கு மேலும் புகழ் ஏற்படவேண்டும என்பதேசாணக்கியன் குறிக்கோள். ஆனல் மகதநாட்டு மக்களும் ஏனையோரும் சந்திரகுப்தனுடைய வீரத்தைப் புகழ்ந்தனர், இச் செய்திகள் நந்தனுக்கு மேலும் கலக்கத்தை உண்டு பண்ணின. சிங்கபுரத்து அரசன், அவன் மகள் சாந்தா யாவரும் சந்திரன் புகழைக் கேட்டுப் பேரானந்தம் கொண்டனர்.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்துகொண்ட சாணக்கியன் மேற்கொண்டு ஆகக் கூடிய திட்டங்களை வகுத்தான். அலெக்ஸாண்டரைப் பெருமை மிக்கவன் என்றும் சாணக்கியன் கருதினன். சந்திரகுப்தனிடத்திலும் அவ்விதமே சொன்னன்.

இருவரும் பர்வதேசுவரனிடம் சென்று, அவன் மூலம் அலெக்சாண்டரை அடையத் தீர்மானித்தனர். உடனே புறப்பட்டனர். இவர்கள் புறப்படுமுன் இவர்களுடைய ஒற்றர்கள் இவர்கட்கு ஆபத்து வராமல் தடுப்பதற்கு அங்கங்கே காத்துக்கொண்டிருந்தனர். சாணக்கியனும் சந்திரகுப்தனும் சீலம் நதிக்கரை

யைக் கடந்து பர்வதேசுவரன் அரண்மனையை அடைந்தனர்.

சிறிது நேரம் சாணக்கியனும் சந்திரகுப்தனும் பர்வதேசுவரனும் அளவளாவினர். அவர்களைப் பர்வதேசுவரன் அலெக்ஸாண்டரிடம் அழைத்துச் செல்லத் தீர்மானித்தான். அவன் தன் அரண்மனையிலிருந்து ஒரு மாளிகையின் வழியே சென்று அலெக்ஸாண்டர் மாளிகைக்கு அவர்களை அழைத்துச் சென்றான். செல்லும்பொழுது ஒரு காட்சியைக் கண்டான் சந்திரன்; இடைவழியில் அழகிய ஒரு மலரைக் கண்டான். 'இம் மலரை அங்கு வைத்தவர் யார்?' என்று ஆராய்ந்தான். நேராக உயரத்தில் பார்த்தான். அங்கே பேரழகு பொருந்திய ஒரு பெண்ணுருவத்தைக் கண்டான். அவ்வுருவமும் அவன் எழிலில் ஈடுபட்டது. அஃது யார் உருவம்? உயரத்தில் அவனைப் பார்த்தவண்ணம் இருந்தவள் சிங்கபுரத்து அரசனின் மகளான சாந்தா என்னும் இளவரசியே. அவள் எழில் மிக்கவள். அவள் அத்தையின் கணவனே பர்வதேசுவரன். அத்தையின் வீட்டிற்குத் தற்செயலாகத் தன் தாயுடன் அவள் வந்திருந்தாள். முன்பு மெழுகினால் ஆக்கப்பட்ட சிங்கப் பொறியைக் கூண்டினின்று சந்திரகுப்தன் வெளிப்படுத்தியது முதல் அவனுடைய மதியூகத்தில் ஈடுபட்டிருந்தாள். அவனைக் காணுமலேயே அவனிடத்தில் அன்பு கொண்டவளாக இருந்தாள். சந்திரகுப்தன் நந்தனுடைய நாட்டைவிட்டு வெளியேறியது முதல் ஒரு விதத்தில் மகிழ்ச்சி அடைந்தவளாக இருந்தாலும், அவனுக்கு ஒருவித இடையூறும் வராமல் இருக்கவேண்டும்

என்ற கவலையில் இருந்தாள். தற்செயலாகப் பர்வதன் அரண்மனைக்கு வந்தபோது சந்திரகுப்தன் வருகையை அறிந்து பேரானந்தம் கொண்டாள். அரண்மனையில் அவன் செல்லும்பொழுது அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அலெக்ஸாண்டருடன் பேசப் போவதை அறிந்த அவள் முன் கூட்டியே மாடியின்மேல் சென்று கவனித்தாள். செல்லும் பொழுது தன் அன்புக் காணிக்கையாக அவ்விடத்தில் ஒரு மலரை வைத்துச் சென்றாள். சந்திரகுப்தன் தன் அடியின் கீழ்க் கிடந்த பூவைப் பார்த்து உடனே உயர நோக்கினான். மலர் வீழ்ந்ததன் உண்மையை உணர்ந்தான். அந்நிலையிலும் ஒரு மகிழ்ச்சி எய்தினான். இவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான் சாணக்கியன்; மேலும் தான் பணியாற்றுவதற்குச் சாதகமான கருவிகள் கிட்டியதைப்பற்றி ஆனந்தமுற்றான்.

இவர்கள் யாவரும் அலெக்ஸாண்டரிடம் சென்றனர். அலெக்ஸாண்டர் இவர்களை வரவேற்ற போதிலும், அவனுடைய பெருமிதம் இவர்கட்குச் சந்தேகம் ஊட்டியது. சாணக்கியன் நயமாகக் கிரேக்க மன்னனைப் பார்த்து, "மன்னவா! எங்கட்கு இப்பொழுது படைப் பலம் வேண்டியிருக்கின்றது. எங்கட்குப் படை கொடுத்து உதவ வேண்டும்" என்றான்.

இவன் கூறிய மொழிகள் எல்லாம் பயனற்றனவாயின. இந்தியா முழுமையும் தன் ஆட்சியின் கீழ் அடங்கிய நாடாக ஆக்க உள்ளியிருப்பதாகவும் தன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டால் உதவக்கூடும்

என்றும்; சந்திரகுப்தன் தனக்குக் கீழ்ப்பட்டு இருக்க வேண்டுமென்றும் கூறினன் அலெக்ஸாண்டர், இக் கூற்றுக்களைக் கேட்ட சந்திரகுப்தனுக்கும் சாணக்கிய னுக்கும் உள்ளத்தே நெருப்புப் பொறி படர்ந்தது. சூழ்நிலையறிந்து அடக்கிக் கொண்டார்கள். உடனே சந்திரன் அலெக்ஸாண்டரை நோக்கி, "நாங்கள் ரொக்கமாகப் பொருள் தந்துவிடுகிறோம்" என்று கூறினன் இக் கூற்றைக் கேட்ட கிரேக்க வேந்தன் கண்களில் தீப்பொறி எழுந்தது. உடனே கோபத் தோடு, "எனக்கு நிகராகவா பேசுகின்றாய்? நான் கூலியாளா? கிரேக்க வேந்தனாகிய என் பெருமையை அறியாத உனக்குக் கொலைத் தண்டனைதான் தீர்ப்பு" என்று கூவி, தன் ஏவலரை அழைத்துச் சந்திரகுப் தனை ஒரு நிலவறையில் அடைக்குமாறு பணித்தான். உள்ளத்திலே கண்ட இன்பத்திடையே இன்னலுற்ற சந்திரகுப்தன் துடித்தான். சாணக்கியன் நழுவி விட்டான். எப்படியும் தன்னைச் சாணக்கியன் தப்புவிக் கக் கூடும் என்று எதிர்பார்த்த வண்ணம் சிறையில் இருந்தான் சந்திரன்.

இப்படிச் சந்திரன் சிறையில் வாட, சாணக்கியன் வெளியில் துடித்தனன். உள்ளத்தில் கவலைமிகுந்தது. நினைத்து வந்தது ஒன்று, நடந்தது ஒன்றாகி விட்டது. அறத்தை நாடி ஆற்றும் பணிகளில் எத்துணை இன்னல்கள் என்று கனன்றான். யோசிப்பதில் பயன் என்ன ? மேற்கொண்டு நடக்கவேண்டியதைச் சிந்திக்கலானான். தக்க சமயத்தில் தூண்டிலைப் போட்டு மீனைப் பிடிப்பது சூழ்ச்சியில் வல்ல சாணக்

கியனுக்கா கடினம்! சாந்தாவின் நிலையைப் பார்த்தான். சந்திரகுப்தனுக்கு ஏற்பட்ட இன்னலைக் கண்டு அவள் துடித்தாள்; எப்படி அவனைக் காப்பாற்றுவது என்று யோசித்தாள். யோசனையிலும் கவலையிலும் ஆழ்ந்தாள். தன் அத்தையிடமும் மன்றுடிக் கேட்டுக்கொண்டாள். நிலவறையின் வழிகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்தாள். அத்தையும் உறுதுணை செய்யச் சித்தமாக இருந்தாள். இவற்றை யெல்லாம் கண்ட சாணக்கியன் சாந்தாவிடம் சந்திரனைக் காக்கவேண்டிய வழிகளைக் கூறினன். தான் தக்க துணையுடன் வெளியில் தயாராக இருப்பதாகவும், அவளே உட்சென்று அவனை வெளியேற்ற வழி செய்யவேண்டும் என்றும் முடிவு செய்தான்.

எவ்வாறு வெளியேறுவது என்று ஆழ்ந்த யோசனையில் இருந்த சந்திரகுப்தன் சாணக்கியனை எதிர்பார்த்தவாறு நிலவறையின் ஓரமாக உள்ள ஒரு கதவை நோக்கி நின்றுகொண்டிருந்தான். அந்தக் கதவு இருக்கும் இடத்தையும், நிலவறையுனுட் புகும் வழிகளையும் தானே சென்று சாந்தா நன்கு அறிந்து கொண்டாள். சந்திரனைத் தப்புவிக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

சந்திரன் நோக்கி இருந்த சுவரின் வழியாக ஓர் அரவம் கேட்டது. அருகில் இருந்த கதவு திறந்து கொண்டது. உடனே அதன் வழியே அவன் வெளியேறினன். அருகில் இருப்பது சாணக்கியனே என்று எண்ணினன். ஆனல் அவன் பார்த்தது யார் உருவம்? அவனது மனச்சிறையில் அடைபட்டிருந்த சிங்கபுர நங்கையே. இடையரு இன்னலிலே ஓர் ஆனந்தத்

தைக் கண்டான். உடனே சாந்தா அவனைப் பார்த்து "தாங்கள் இக்கணமே தப்பவேண்டும். எப்படியும் தாங்கள் சிங்கபுரத்தை அடைய ஏற்பாடு செய்கிறேன்; இனித் தங்களுக்கு நான் அடிமை" என்றாள். இக்கூற்றைக் கேட்கச் சந்திரனுக்கு மகிழ்ச்சி உண்டாகவே அவன் பேச நா எழாமல் துடித்தான். "நங்காய்! நீ வைத்த மலரை யான் எடுத்தேன். அப்பொழுதே நீ என் உள்ளத்தில் புகுந்து விட்டாய். நான் மகத நாட்டை அடையும் வெற்றியைக் காட்டிலும் உன்னை அடையும் வெற்றியைத்தான் பெரிதாகக் கருதுகிறேன். இப்பொழுது நம்முடைய மணத்தைக் காந்தர்வமாக முடித்துக்கொள்வோம்" என்றான். அருகில் சாணக்கியனுடைய ஒற்றன் இருந்தான். அவனையே சான்றாகக் கொண்டு சந்திரன் தன் மோதிரத்தை அவளுக்கு அளித்தான். இருவரும் மகிழ்ச்சி கொண்டனர். சாந்தாவிடம் விடை பெற்றான் சந்திரன். சாணக்கியனால் ஏவப்பட்ட ஒற்றனைத் துணையாகக் கொண்டு சந்திரன் வெளியேறினான். தயாராக வெளியில் மறைவாய்க் காத்துக்கொண்டிருந்த சாணக்கியன் இவனைக் குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டு விரைந்து சென்றனன்.

---

# 7. அறத்தின் வெற்றி

சந்திரகுப்தன் நிலவறையை விட்டு வெளியேறிய செய்தி மர்மமாகவே இருந்தது. பர்வதேசுவரன் தான் அறிந்திருந்தும் அறியாததுபோல் நடித்து விட்டான். அலெக்ஸாண்டர் சந்திரகுப்தனைக் கடுமை யாகக் தண்டிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நிலவறையினின்றும் அவனைக் கொணருமாறு பணிந்தனன். பணியாளன் பார்த்துவிட்டு நிலவறை திறக்கப்பட்டிருப்பதையும், சந்திரன் மாயமாய் மறைந்ததையும் அவனிடம் சென்று உரைத்தான். அலெக்ஸாண்டர் சினத் தீயில் ஆழ்ந்தான். பர்வதேசுவரன் தனக்கு இது எப்படி நடந்ததென்றே விளங்க வில்லை என்று கூறிவிட்டான். கிரேக்க மன்னனுக்கு ஒரு புறத்தில் சந்திரகுப்தனிடம் கோபம் இருப் பினும், மற்றொரு புறத்தில் அவனுக்கு உதவியாக இருந்த சாணக்கியனிடத்தில் பெருங் கோபம் மூண் டது; அவனைப் பிடிக்க முயன்றான். ஆனால் சாணக்கி யன் ஆற்றிய சூழ்ச்சிப் பொறியானது மக்களுக்கு அலெக்ஸாண்டரிடத்தில் வெறுப்பு உண்டாக்கியது. இப்பொழுது ஒரு புறத்தில் நந்தனுடைய ஒற்றர்களி னின்றும், மற்றொரு புறத்தில் அலெக்ஸாண்டர் பகை யினின்றும் சாணக்கியன் தப்பவேண்டி இருந்தது. இதற்கிடையே சாணக்கியன் தன் சூழ்ச்சியால் பேரறிஞர்களாகிய நண்பர்களைப் பெருக்கிக் கொண்டான். அறத் துணைவர்களாகிய பக்கபலம் பெருகியபின் அந்நியர் பகை என்ன செய்ய முடியும்?

சிங்கபுரத்து நங்கையாகிய சாந்தா சந்திர குப்தனைத் தப்புவித்தது முதல் கவலையில் ஆழ்ந்தாள். தன் நாட்டிற்கு என்ன ஆபத்து விளையுமோ என்று அஞ்சினாள். இவளுடைய எண்ணங்கள் எல்லாவற்றையும் உணர்ந்தாள் இவள் அத்தை. சாந்தா, சாணக்கியன் இவர்கள் கவலையைக் காட்டிலும் சாந்தா அத்தைக்கு உண்டான கவலைக்கு எல்லை இல்லை. ஒரு புறம், தன் கணவனுக்கு அலெக்சாண்டரால் ஆபத்து விளையுமோ என்ற கவலை; மற்றொருபுறம், சாந்தாவின் நிலையை உணர்ந்து அவள் பெற்றோரிடத்தில் எடுத்துரைத்து அவளுக்கும் சந்திரனுக்கும் திருமணம் செய்விக்க வேண்டும் என்ற ஆவல்.

சந்திரகுப்தன் தப்பிய மறு தினமே சாந்தா சிங்கபுரத்துக்குச் சென்று விட்டாள். சிங்கபுரம் சென்றதும் தன் பெற்றோருக்குத் தன் கருத்தை எப்படி எடுத்துரைப்பதென்ற கவலையில் ஆழ்ந்தாள். இந்நிலையில் சிங்கபுரத்து அரசனுக்கும், மகத வேந்தனுக்கும் உள்ளத்துக்குள்ளேயே பூசல் இருந்து வந்தது. இதற்கிடையில் சந்திரகுப்தன் கானகத்தில் சிங்கத்தினின்றும் உய்ந்ததாகக் கேள்வியுற்ற அவன் சந்திரகுப்தனிடத்தில் பெருமதிப்புக் கொண்டிருந்தான்: சந்திரகுப்தன் சிறையினின்றும் தப்பியதையும் அறிந்தான். இதற்குக் காரணம் சாணக்கியனே என்று தீர்மானித்தான். ஆனால் சந்திரகுப்தன் உய்ந்தது தன் அருமை மகளால் என்று அவன் நினைக்கவில்லை.

அத்தை வீட்டினின்றும் சாந்தா சிங்கபுரத்தை அடைந்ததும் அவள் நிலையை அறிந்த

சிங்கபுர வேந்தன் அவளுக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்துச் சுயம்வரம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்தான். முன் ஏற்பாட்டின்படி சந்திரகுப்தன் சுயம்வர மண்டபத்திற்கு வந்தான். முறைப்படி சந்திரகுப்தனுக்குச் சாந்தா மாலையிட்டாள்.

யாவரும் திகைத்தனர் இதற்கிடையில் சாந்தாவின் அத்தையாகிய சொர்ணமயி இவர்களுக்கு இடையூறு விளைவிக்காதிருக்குமாறு தன் கணவனிடம் நயமாகச் சொல்லி அவனை வழிக்குக்கொணர்ந்தாள். பர்வதனும் உள்ளத்திலே நல்லெண்ணங்கொண்டு மறைமுகமாகத் தானும் அதற்கு உடன்பட்டான். சிங்கபுரத்து வேந்தன் மகளை மணந்தவுடன் அந்நாட்டிற்குச் சந்திரகுப்தன் இளவரசனானான். அவ்வேந்தன் சந்திரனைக் காப்பாற்றும் பொருட்டு எந்த நிமிடமும் தயாராயிருக்கவேண்டி, படைபலத்தைச் சிறப்பாக அமைத்தான். இராஜசேனன் என்பான் மகத நாட்டில் ஒரு படைத் தலைவன். அவன் சிறந்த வீரனாயிருந்தும் நந்தனின் பகைமைக்குப் பாத்திரமானான். அவன் சந்திரகுப்தனுடைய வெற்றியை எந்த நிமிடத்திலும் எதிர்பார்த்திருந்தான். சந்திரகுப்தன் சிங்கபுரத்தில் இருப்பதை அறிந்தான். தான் அந்தரங்கமாக அமைத்திருந்த மிகுந்த படைகளுடன் சந்திரகுப்தனை வந்தடைந்தான், இவை யாவும் சாணக்கியனுடைய அரும் பெருஞ் சூழ்ச்சியின் பயனேயாகும்.

இப்போது சாணக்கியனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. பர்வதன் முதலிய வேந்தர்கள் கிரேக்க மாவீரனுடைய கைப்பொம்மையாக இருப்பதை அறிந்தான். அவர்களுடைய நட்பைப் பெறுவதற்கு

முன் அலெக்ஸாண்டரை ஒழிக்கக் கருதினுன். மேலும், சிந்து நதி தீரத்தின் கரையிலுள்ள சிற்றரசர்களெல்லாம் அலெக்ஸாண்டரை வெல்லுவதற்குத் தருணம் பார்த்திருந்தனர். அவர்கள் எல்லாரும் சந்திரகுப்தனுடன் சேர்ந்துகொண்டனர்.

சந்திரகுப்தனின் படைவலிமையைக் கண்ட அலெக்ஸாண்டர் கண்ணியமாகப் போரை நிறுத்திக் கொண்டான். சந்திரனுக்கு எளிமையாக வெற்றி கிட்டியது. இனிமேல் சாணக்கியன் சந்திரகுப்தனைக் கொண்டு கிரேக்கனின் வலியை ஒழிக்கப் பார்த்தான். அலெக்ஸாண்டர் தங்கியிருந்த மேற்கரங்கங்களிலுள்ள கோட்டையைத் தகர்க்கச் சென்றுன் சந்திரன். அப்பொழுது பெருவீரனுகிய கலிங்க நாட்டு மன்னன் நிறைந்த யானைகளையும் மாவுத்தர்களையும் கொடுத்து உதவினுன். இவ்வாறு பல இன்னல்களுக்கிடையே அலெக்ஸாண்டர் தன் தாய்நாடு திரும்ப நினைத்தான். இடையில் கிரேக்கர்கள் எவ்வாருயினும் வெற்றிபெற வேண்டுமென்று நினைத்தனர். அவருடைய எண்ணங்கள் பலிக்கவில்லை. அப்போது அலெக்ஸாண்டர் இதுவரை தான் கைப்பற்றிய நாடுகளைத் தன்படைத்தலைவனிடம் ஒப்புவித்துவிட்டு ஒரு தீவுக்குச் சென்று அங்கிருந்து பாரசீகம் சென்றுன். அவ்வாறு தாய்நாடு செல்லுகையில் விஷ சுரம் கண்டு அலெக்ஸாண்டர் மாண்டான்.

இப்பொழுது சாணக்கியனுக்கும், சந்திரகுப்தனுக்கும் அந்நியர் பயம் நீங்கி உள் நாட்டில் ஆதரவு ஏற்பட்டது. இனி மகத நாட்டில் புக வேண்டும் என யோசித்தனர்.

பர்வதனுடைய நட்பினைச் சாணக்கியன் பெருக்க நினைத்தான். பர்வதேசுவரனுக்கு மகத நாட்டு வேந்தன் ஆண்டுதோறும் திறை செலுத்தி வந்தான். நந்த அரசனுடைய படைப்பலம் குன்றியதை நினைத்த பர்வதேசுவரன் வரிப் பணத்தை அதிகமாக்கினன். இவ்வாறு தூண்டுகோல் செய்தவன் சாணக்கியனே யாவான். இவற்றைக் குறிப்பால் அறிந்த ஜீவசக்தி திறைப்பணம் கொடுக்க மறுக்குமாறு நந்தனிடம் கூறினன். இச் செய்தியைக் கேட்ட பர்வதன் கோப முற்று நந்தனிடத்தில் வெறுப்புக் கொண்டான். அவனுடன் போர் செய்யவும் துணிந்தான். இப் பொழுது பர்வதன் சந்திரகுப்தன் ஆகியோர் நந்தனை எதிர்க்க இணைந்தனர்.

இதற்கிடையில் வேறு சில மன்னர்களும் சந்திர குப்தனுக்கு உதவி புரிந்தனர். சந்திரகுப்தனைப் பற்றி ஆதியிலிருந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த நந்தனுக்கு இப்போது பெருங் கவலையும் சினமும் மூண்டன. இவற்றிடையில் நந்தனுடைய படை களுக்குள் கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. சந்திரபாநு, சிம்மலன் முதலிய படை வீரர்கள் நந்தனுடைய கட்சியிலே சேர்ந்தாலும் உண்மையில் சந்திர குப்தனுக்கு உழைக்கத் தயாராக இருந்தனர். இறுதியில் தாம் சந்திரகுப்தனுடன் சேர்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இராட்சசன் தனைந்தன் முதலியவர்கள் தலை மையில் நந்தன் படை திரட்ட ஆயத்தமாயினன். ஜீவ சக்தியும் போரைக் கிளப்பிவிட்டுப் போர் முனையில் நந்தனைக் கொணர்ந்து நிறுத்தத் தயாரானன்.

நந்தனும் இறுதிவரை உறுதியை விடவில்லை. இந்த நிலையில் சாணக்கியன் தன்னிடம் இருக்கும் படைகளைக் கொண்டு வர்த்தமான்புரம் முதலிய ஊர்களைத் தன் வசப்படுத்திக் கொண்டான்.

இவற்றையெல்லாம் கேள்வியுற்ற நந்தனுக்கும் இராட்சசனுக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. ஆனால் ஜீவசக்தி இதற்குச் சமாதானம் கூறிவந்தான். சந்திரகுப்தன் ஜீவசக்தியின் மூலம் நந்தர்களுடைய படைப் பலத்தைப்பற்றி அறிந்துகொண்டான். காசி, இந்திரப் பிரஸ்தம் முதலிய இடங்கள் படைவலிமை யற்று இருந்ததால் சந்திரகுப்தன் அவ்விடம் சென்றான். அங்குள்ள படைவீரர்களும் மக்களும் போர்தொடுக்காமலே அவனை வரவேற்றனர். சந்திரனும் சாணக்கியனும் அப்போது ஒரு சபதம் செய்துகொண்டனர். அதன்படி நந்தனுடன் பெரும்போர் ஏற்பட்டால் நாட்டுக் குடிமக்களுக்கு ஒருவிதமான ஆபத்தும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வது என்று தீர்மானித்தனர். இது மக்கள் உள்ளத்தில் சந்திரகுப்த சாணக்கியர்களிடத்தில் ஒரு மதிப்பு உண்டாகும்படிச் செய்துவிட்டது. பெரும் போர் துவங்க ஆயத்தமாயிற்று.

படைகளெல்லாம் பாடலிபுரத்தை அடைந்தன. ஜீவசக்தி நந்தன் படைகளை அழைத்துச் சென்று உபதேச முறையில், "படைத் தலைவர்களே! நாளை நந்தர்களுக்கு ஒரு கண்ட நாள். ஆனால் அதற்கு நீங்கள் அஞ்சவேண்டாம். உங்கட்கு ஓர் ஆபத்தும் வராது" என்றான்.

மறுநாள் காலை ஜீவசக்தி படைகளுடன் வடக்கு வாயிலுக்குவந்தான்; அங்கே பர்வதனும் அவனுடைய படைகளும், சாணக்கியனும் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். சாணக்கியன் தன் படைகளைத் தோற்றோடுவதுபோல் செய்ய, நந்தர்கள் அந்தப் படைகளைப் பின் தொடர்ந்து சென்றனர். ஆனால் வெகு தூரம் சென்ற பின்பு பர்வதனுடைய படைகள் அவர்களை வளைத்துக்கொண்டு போரிட்டன. நந்தர் பஸ்டைகள் நாசமாயின.

தெற்கு வாயிலில் சந்திரகுப்தன் கலிங்க மன்னனுடன் சேர்ந்துகொண்டு இராட்சசனுடன் வந்த மகத வீரர்களோடு போரிட்டான். ஆனால் போரின் நடுவில் இராட்சசன் நந்தர்கள் இறந்ததை அறிந்தான். போரை நிறுத்திக்கொண்டு ஓடோடிச் சென்று சாணக்கியனிடம் அவர்களின் உடல்களைத் தருமாறு கேட்டான். சாணக்கியனும் நந்தர்களின் உடலை ஈந்தான். வெற்றி பெற்ற சந்திரகுப்தன் தன் வீரர்களுடன் பாடலிபுரத்தினுள் நுழைந்தான்.

# 8. சந்திரன் முடிசூடுதலும் இராட்சசன் சூழ்ச்சியும்

வெற்றிமேல் வெற்றி கிட்டியது சந்திரகுப்த னுக்கு. சாணக்கியனுடைய அருஞ்செயல்கள் சந்திர குப்தனுக்கு அப்பொழுதப்பொழுது ஏற்பட்ட இன்னல்களைக் காக்கவல்லனவாக இருந்தன. நந்தர் வீழ்ச்சியுற்றனர். நந்தர் தலைவனின் சடலத்தை இராட்சசனிடத்தில் ஒப்புவித்ததும் இராட்சசன் தன் தலைவனும் நந்தர்களும் அழிந்தது குறித்து உளம் துடித்தான். மிகவும் கதறினன்.

நந்தர்களை வென்ற சந்திரகுப்த சாணக்கியர்கள் மகத நாட்டுத் தலை நகரத்துள் புகுந்தனர். நகரத்தில் நந்த அரசனின் அரண்மனையில் திடீரென்று நுழைய இயலவில்லை. மேலும் அவ்வரண்மனைக்குள் தகுந்த முறைப்படி செல்ல வேண்டும் என்ற எண்ணங் கொண்டனர். நகரத்துட் புகும்பொழுது அவர்களுடன் பர்வதேசுவரன், அவன் மகன் மலயகேது, பர்வதேசுவரனுடைய நேச மன்ன னுகிய வைரோசனன் ஆகியோரும் வந்தனர். அச் சமயத்தில் சந்திரகுப்தன் அரண்மனையிலன்றி வேறு ஒரு சிறந்த மாளிகையில் தங்கினன். அம் மாளிகையில் தங்கினுலும் சாணக்கியன் சந்திரகுப் தனைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தான். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இராட்சசன் தன் தலைவர்களைச் சிதைத்த காரணத்தால் சந்திரனை ஒழிக்கச் சதி செய்து வருகின்ருன். அவ-

னுடைய ஒற்றர்கள் யாண்டும் வட்டமிட்டு வருகின்றனர். அப்பகையைச் சந்திரன் சமாளிக்கவேண்டியிருக்கும் என்பது முக்கியமான காரணம்.

இராட்சசனது பகைமையே யன்றி உட்பகைகள் சில தாண்டவமாடின. அவற்றில் முதன்மையானது பர்வதேசுவரனுடைய எண்ணம். பர்வதேசுவரன் சந்திரகுப்தனுக்கு உறவு முறையினன். உள்ளத்தே பொருளாசை பிடித்தவன். சாந்தா தேவி காரணமாக உறவு முறையாகிவிட்டாலும், அவனுடைய பொருளாசையும் செருக்கும் தலை தூக்கலாயின. அவனுடைய அந்தரங்கமான எண்ணம் என்னவெனில், மகத நாட்டை அடைவதற்கு உதவி செய்யும் வாய்ப்பைக் கொண்டு தான் பாதியாட்சியைப் பெறுவது என்பதுதான். அவன் அவ்வெண்ணங்களோடு நிற்கவில்லை. சந்திரகுப்தனைப் பேருக்கு அரசனாய் அமைத்து இந்தியநாட்டையே தன்னடிக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதுதான் அவர் உட்கருத்து. இதனைக் குறிப்பாக அறிந்தான் சாணக்கியன்.

சாணக்கியன் பர்வதனை வெளியே பாராட்டுவது போல் காட்டினாலும் உள்ளத்தில் அவனைப்பற்றி ஐயமே கொண்டான். மகத நாட்டிற்குள் புகுமுன் அவனுடைய துணை வேண்டியிருந்தது. இவற்றை எல்லாம் கருதியே சாணக்கியனும் சந்திரகுப்தனும் மகத நாட்டில் பாதி நாடு கொடுப்பதாகப் பர்வதேசுவரனுக்கு வாக்குறுதி அளித்தனர். இவற்றை நம்பியே பர்வதன், சந்திரகுப்தனுடன் இருந்து தன் எண்ணங்களைச் சாதிப்பதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தான்.

சாணக்கியனுடைய ஒற்றனை ஜீவசக்திக்கு இவன் செயல்வெறுப்பூட்டியது. பர்வதன் மகன் மலயகேது அவன் தந்தையின் எண்ணத்திற்கு மாருக இருப்பானு? அவன் தந்தைக்கு உடந்தையாக இருந்து வேண்டிய வழிகளைத் தேடிக்கொண்டிருந்தான். இவற்ருேடன்றிச் சந்திரகுப்தனுக்கு மற்றுமோர் உட்பகை இருந்தது. வைரோசனன் என்பவன் ஒரு சிற்றரசன். அவன் பர்வதனுடைய நண்பன். அவனும் சந்திரகுப்தனுடைய நாட்டில் சில பகுதிகளைப் பெறலாம் என்றிருந்தான்.

இவ்வாறு இராட்சசன் செயல்கள் ஒருபுறம் இருக்க, உட்பகைவர்கள் ஆகிய பர்வதன் முதலியோர் செயல்களும் சந்திரகுப்தனுக்குத் துன்பங்களை ஊட்டுவனவாக இருந்தன. சாணக்கியன் இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்தான். அவனுடைய எண்ணம் என்னவெனில், இப் பகைகளை ஒடுக்கி விட்டுப் பின்னரே சந்திரனை அரியணையில் ஏற்ற வேண்டும் என்பதுதான். அவற்ருேடு சூழ்ச்சியிலும் வல்ல இராட்சசனுடைய குணங்களையும் அறிந்து மெச்சினுன்.

உட்பகைவர்களாக இருந்த பர்வதன் முதலியோரிடந்தான் சாணக்கியனுக்கு மிகவும் வெறுப்புமூண்டது. அப்பொழுதப்பொழுது அவர்கள் செயல்களை ஒற்றர்களைக் கொண்டு ஆராய்ந்து கொண்டிருந்தான். சாணக்கியன் சந்திரகுப்தன் இவர்களுடைய செயல்கட்கு அப்பொழுதப்பொழுது ஜீவசக்தி உறுதுணை புரிந்து வந்தான். முட்களைக்

கொண்டே முட்களை அழிக்கவேண்டும் என்று தீர்மானித்தான் சாணக்கியன்.

இராட்சசன் சூழ்ச்சியில் மிக்க பெருவீரன்; கடமை உணர்ச்சி மிக்கவன். பாரதப் போரில் அநீதியுள்ள துரியோதனனுக்கே கர்ணன் உதவி புரிந்தான். அறத்திற்கு மாருகக் கர்ணன் போர் செய்தான். அதற்குக் காரணம் என்ன? கடமையுணர்ச்சிதான். இக் கடமையும் செய்ந்நன்றியுமே அவனுக்கு இறுதியில் கண்ணனுடைய அருட்பேறு கிட்டக் காரணமாயின. இதே போலத்தான் இராட்சசனும் நந்தர்களை இறுதிவரை ஆதரித்து வந்தான். கடமை உணர்ச்சி அவன் உள்ளத்தில் குடிகொண்டது. நந்தனின் அநீதியை அறிந்தும், அவன் அழிந்தும் அக்குலத்தில் உள்ளவர்களையே மகத நாட்டில் முடிசூட்ட நினைத்தான். நந்தர்களில் முக்கியமானவர்கள் போரில் மாண்டனர். அவர்களில் சர்வார்த்தன் என்ற ஒருவனே எஞ்சியிருந்தான். இந்தச் சர்வார்த்தனுக்கு முடிசூட்ட இராட்சசன் சந்திரகுப்தனுக்கு எதிர்ச் சூழ்ச்சி செய்தான்; சாணக்கியனுக்கும் சந்திரகுப்தனுக்கும் நேர் எதிரியாகிவிட்டான்.

இராட்சசன் தன் சூழ்ச்சித் திறத்தால் சந்திரகுப்தனை ஒழிக்கச் சதி செய்தான். அவனுடைய சூழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருகத் துவங்கின அவற்றிற்கு உறு துணையாக ஒற்றர்களை அங்கங்கே அமைத்திருந்தான். ஒற்றர்களுக்கு ஒற்றனாய் விளங்கினன் ஜீவசக்தி. இராட்சசன் உள்ளத்தினுள்

இருக்கும் சக்திகளை அறிதற்குச் சாணக்கியனுக்கு ஜீவசக்தி பெருந்துணை புரிந்தான்.

ஒரு முறை சந்திரகுப்தனைப் பார்ப்பதற்காக நஞ்சூட்டிய சில பழங்களைக் கொடுத்துத் தன் ஒற்றன் மூலம் அனுப்பினான் இராட்சசன். அவ்வொற்றன் சந்திரகுப்தனுக்குக் காணிக்கையாகப் பழம் எடுத்துச் சென்றான். இக் குறிப்பினைச் சாணக்கியன் எங்ஙனமோ அறிந்தான். நடந்தது வேறாயிற்று. சாணக்கியன் அதே பழத்தை இராட்சசன் கொடுத்த தாகச் சொல்லி ஜீவசக்தி மூலம் சர்வார்த்த சித்திக்கு அனுப்பிவிட்டான். சர்வார்த்தன் அப் பழத்தை மகிழ்ச்சியுடன் உண்டு மயக்கத்தில் உழன்று மாண்டான். எஞ்சியிருந்த ஒரு நந்தனும் ஒழிந்தான்.

சர்வார்த்தன் இறந்ததை அறிந்த இராட்சச னுக்கு உண்டான கோபத்திற்கு எல்லையே யில்லை. சந்திரகுப்தனை எவ்வாறாயினும் ஒழித்துவிடுவது என்று வைரம் கொண்டான்.

நஞ்சு ஊட்டப்பட்ட ஒரு நங்கையைக் கொண்டு சந்திரனை அழிக்கத் திட்டமிட்டான். ஜீவசக்தியை நம்பி அவன் மூலமாக அந்த விட நங்கையைச் சந்திர னிடத்தில் அனுப்ப ஏற்பாடு செய்தான். அந்த விட நங்கையின் இயல்பு என்னவெனின், ஒருவனை அவள் நெருங்கியதும் அவளது விஷ வேகந் தாங்காமல் அவன் இறந்துவிடுவான். ஜீவசக்தி அச்சமயத்தில் பர்வதேசுவரன் குடிவெறியில் இருப்பதை அறிந்தான். ஜீவசக்தியின் மூலம் வந்த நங்கையைச் சாணக்கியன்

பர்வதனிடம் அனுப்பி வைத்தான். இராட்சசனால் அனுப்பப்பட்ட அந்த விடநங்கை பர்வதனிடம் சென்றாள். பர்வதன் நங்கையைத் தொட்ட மாத்திரத்தில் கொடிய விடத்தால் தாக்கப்பட்டு மாண்டான்.

அப்போது சாணக்கியன் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவனது திட்டத்திற்கு முட்டுக் கட்டையாகவும், உட்பகையாகவும் இருந்த ஒரு மலை ஒழிந்தது! பர்வதன் ஒழிந்த அக்கணத்திலேயே அவன் மகன் மலயகேது அங்கிருக்க அஞ்சினான்; உடனே தான் மகதநாட்டில் இருப்பது தவறு என நினைத்துத் தன் நாட்டிற்கு ஓடிவிட்டான். இம் முறையும் சந்திர குப்தன் தப்பியதை அறிந்த இராட்சசனுக்கு மேலும் கோப வெறி மூண்டது.

வேறு ஒரு பெரிய சூழ்ச்சி செய்தான். ஒரு நாள் இரவு சந்திரகுப்தன் தன்னுடைய படுக்கையறைக்குச் சென்றான். அங்கே சாணக்கியன் முதலியவர்களோடு யோசனையில் ஆழ்ந்திருந்தான். சாணக்கியனுடைய கண் கீழே ஏதோ ஒரு பொருளை நோக்கியது. எறும்புகள் சாரிசாரியாகச் செல்வதைப் பார்த்தான் சாணக்கியன். கீழே ஒரு துவாரத்தினின்றும் அவை வந்து கொண்டிருந்தன. அவற்றின் வாய்களில் உணவுத் துளிகள் இருப்பதைக் கண்டான். அவை எங்கிருந்து வருகின்றன என்று ஐயுற்றான். உடனே அவன் கூர்ந்து நோக்கினான். சந்திரகுப்தனைப் பார்த்து, "அரசே! இக்கணமே இவ்வறையைவிட்டு வெளியேற வேண்டும். பேராபத்துச் சூழ்ந்திருக்கிறது. இவ் வெறும்புகளின் வாயினில் பார்த்தீர்களா? இவை எங்கிருந்து வருகின்றன? உங்கள் அறையின்கீழ்

ஏதோ சூழ்ச்சியால் உங்களைக் கொல்ல ஏற்பாடாகி யிருக்கிறது. இது இராட்சசன் சூழ்ச்சியே யன்றி வேறல்ல" என்ருன்.

உடனே யாவரும் வெளிவந்தனர். அவ்வறையில் தீ வைத்தனர். நடந்தது என்னவென்ருல், சந்திரகுப்தனது படுக்கையறைக்குக்கீழ் ஒரு சுரங்கம் அமைத்து விட்டான் இராட்சசன். இச்சுரங்கத்திலிருந்தே சந்திரகுப்தனைக் கொல்லச் சதி செய்திருந்தான். அச் சுரங்கத்தினுள் இருந்த கொலைப்பாதகர்கள் தங்கட்கு உணவு சேமித்து வைத்திருந்தார்கள். அவ்வுணவினைத் தான் எறும்புகள் மேலே கொணர்ந்தன. தீ வைத்தவுடன் சுரங்கத்திலிருந்த யாவரும் மாண்டனர். இராட்சசன் சதி வீணுயிற்று.

இவ்வாறு சந்திரகுப்தனுக்கு ஆபத்துக்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்துகொண்டிருந்தன. சாணக்கியன் சூழ்ச்சியால் எல்லாம் சமாளிக்கப் பட்டன. சுரங்கத்தில் தான் அமைத்த ஒற்றர்கள் இறந்தார்கள் என்பதை அறிந்த இராட்சசன் கொண்ட கோபத்திற்கும் கவலைக்கும் எல்லை இல்லை. இறுதியாகச் சந்திரகுப்தனை எப்படியாவது ஒழித்து விடவேண்டுமென்று ஒரு மருத்துவன்மூலம் அவனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். சந்திரகுப்தனுடைய உடல் நலத்தைக் கவனிப்பதற்கு ஒரு மருத்துவன் இருந்தான், அவனை இராட்சசன் தன் வலையில் இழுத்துவிட்டான். அவன் மூலமாகச் சந்திரனை ஒழிக்கத் திட்டமிட்டான். ஒரு நாள் மருத்துவன் அரசனுக்கு மருந்துகொடுக்கச்சென்ருன். அரசன் மருந்து

சாப்பிடுமுன் சாணக்கியன் அம்மருந்தைக் கூர்ந்து கவனிப்பது வழக்கம். மருத்துவன் பாத்திரத்தில் மருந்து கலக்குவதைக் கவனித்தான். மருத்துவன் அம்மருந்து சிறந்த மருந்து என்றும், உண்டால் மிக நல்லது என்றும் கூறினான். சாணக்கியன் மருத்துவத்தில் கைதேர்ந்தவன். மருத்துவன் வைத்திருந்த பாத்திரத்தின் நிறம் மாறுபட்டிருந்தது. இதைக் கண்டு ஐயங்கொண்டு சாணக்கியன் அம்மருத்துவனையே மருந்தைச் சாப்பிடச் சொன்னான். மருத்துவன் அம்மருந்தைப் புசிக்க அஞ்சித் தனக்கு நோயில்லை என்றான். ஆனால் சாணக்கியன் அவனைக் கட்டாயப் படுத்தி அதைச் சாப்பிடச் செய்தான். மருத்துவன் வேறு வழியில்லாமல் அம்மருந்தை உண்டு மாண்டான்.

சந்திரகுப்தனை ஒழிப்பதற்கு இவ்வாறு பல வழிகளில் முயன்றான் இராட்சசன். ஆனால் ஒவ்வொரு துறையிலும் இராட்சசனது செயல் தோல்வி அடைந்தது. சாணக்கியனோ எந்த வழியிலும் சந்திரனைக் காப்பாற்றத் துணிந்திருந்தான். அதோடு இராட்சசன் வேறு என்ன என்ன செய்யக்கூடும் என்றும், அவனுடைய ஒற்றர்கள் யார் யார் என்றும் ஆராய்ந்து கொண்டிருந்தான். இவற்றை அறிந்த இராட்சசன் இனி அங்கிருந்தால் தனக்கு ஆபத்து என்று தீர்மானித்தான். ஒருவரும் அறியாமல் அவ்வூரை விட்டு அகன்றான். இராட்சசன் வெளிப்போவது சாணக்கியனுக்குத் தெரிந்திருந்தும், அவன் வெளியில் இருப்பதே மேல் எனக் கருதி அவனைப் பிடிக்காமல் தப்பி ஓட விட்டுவிட்டான். ஆனால் இராட்சசன் போகும்

பொழுது வீணே போகவில்லை. பேராபத்தான செயலைச் செய்து விட்டுச் சென்றான். அதாவது முடி சூட்டு விழாவின்போது சந்திரகுப்தனை ஒழிக்கச் சதி செய்திருந்தான்.

இராட்சசன் ஒழிந்தான் என்று சாணக்கியன் அறிந்ததும் கவலை விடுத்திருந்தான். இனிமேல் சந்திரகுப்தனுக்கு முடி சூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். இராட்சசனுடைய ஒற்றர் சிலர் இந்த ஏற்பாடுகளில் பங்கெடுத்தனர். அவர்கள் சந்திரகுப்தனுக்காக உண்மையில் உழைப்பவர்களாகப் பாவனை செய்தனர். அவர்கள் ஊர்வலம் வரும்போது அழகான கவண் வளைவு ஒன்று கட்டி அவ்வளைவினில் ஒரு பொறி அமைத்தனர். அந்த வளைவில் இராட்சசனுடைய ஆள் ஒருவனை வைத்திருந்தனர். அவன் அதனுள் மறைவாக இருந்தபடியே சந்திரகுப்தன் ஊர்வலம் வரும்பொழுது அவனை அப் பொறியின் மூலம் கொல்லத் தயாராக இருந்தான். அவர்கள் செயல்கள் இவற்றோடு அமையவில்லை. இராட்சசன் தனக்கு வேண்டிய ஒரு மாவுத்தனை அங்கு அமைத்திருந்தான். சந்திரகுப்தனுக்குப் பின்னால் மாவுத்தான் யானையில் இருந்து கொண்டு, சமயம் பார்த்துச் சந்திரகுப்தனைக் குத்திக் கொன்றுவிட வேண்டுமென்று ஏற்பாடு. இவையெல்லாம் இராட்சசன் ஊரைவிட்டு வெளியேறிய போதே திட்டமிட்டவை.

இச் சமயத்தில் பல பேர் தன்னுடன் பணியாற்றுவதைக் கண்ட சாணக்கியனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்யத் திட்ட

மிட்டான், சாணக்கியன். உட்பகையாக இருந்த பர்வதன் ஒழிந்தான். மலயகேது ஓடிவிட்டான் ஒருவனே எஞ்சியிருக்கின்றான்; அவனும் தனக்கு நாடு கிடைக்கும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தான். சாணக்கியன் இந்த முடிசூட்டு விழாவின்மீது இராட்சசன் ஏற்படுத்தியிருந்த சதியைக் கொண்டு அந்த ஒரே உட்பகைவனையும் ஒழிக்கத் திட்டமிட்டான். அவனே வைரோசனன் என்பான். சந்திரகுப்தன் முடி சூட்டிக் கொள்ள இருந்ததை அறிந்து வைரோசனன் பொறுமையுடன் இருந்தான். இதை அறிந்த சாணக்கியன் அவனை வரவழைத்து, அன்பரே! தங்கட்கு ஒரு மொழி கூறுகிறேன்: இந்த நாட்டில் பாதியைப் பர்வதேசுவரனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தேன். ஆனால் அவன் இறந்துவிட்டான். அவன் மகன் மலயகேதுவும் ஓடிவிட்டான். அவ்வாறு கோழையாக இருக்கும் அவனுக்கு நாங்கள் நாட்டைக் கொடுக்க மாட்டோம். இச் சமயம் அந்தப் பாதி நாட்டைப் பெறுவதற்கு முடிசூட்டு விழா நடக்கப் போகிறது. தாங்கள் சந்திரகுப்தன் உடையில் முதலில் ஊர்வலம் வரவேண்டும். பின்னர்ச் சந்திரகுப்தனுக்கு முடி சூட்டலாம். ஆனால் வெளிப்படையாகத் தாங்களுக்கு முடி சூட்டு விழா அமைத்தால் மகத நாட்டு மக்கள் எதிர்க்கக்கூடும், ஆகையால் தாங்கள் உடன்பட்டால் இப்போது குறித்த இந் நேரத்தில் பட்ட யானையின் மேல் ஊர்வலம் வரலாம் என்றான்.

இம் மொழிகளைக் கேட்ட வைரோசனனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. யானைமேல்

சந்திரகுப்தனது உடையில் ஊர்வலம் வர உடன் பட்டான். ஆட்கள் அவனை நன்றாக அணி பெறச் செய்தார்கள். உயர்ந்த ஆடைகளால் அவன் உடலை யெல்லாம் மறைத்தார்கள். கண் மாத்திரந்தான் வெளியில் தெரிந்தது. அவனும் அப் பேராடைகளை யும் அணிகலன்களையும் கண்டு பேரானந்தம் கொண் டான். விழா துவங்கிற்று. ஊர்வலம் நடந்தது. வெகு சிறப்பாக யானையின்மேல் அமர்ந்து சென்றான் வைரோசனன். அவனை எல்லோரும் சந்திரகுப்தன் என்றே கருதி இருந்தார்கள். இராட்சசனால் அமைக்கப்பட்ட மாவுத்தனும் தக்க சமயத்தில் தன் சூழ்ச்சிகளைச் சாதிக்கத் தயாராக இருந்தான். யானை அந்த வளைவு இருக்கும் இடத்திற்கு முன் வந்தது. அச் சமயத்தில் யானைப் பாகன் அவனைக் குத்தக் கருவியை எடுத்தான். அதற்குள் யானை பிணைக்கப் பட்ட சங்கிலி சிறிது விலகிற்று. யானை விரைந்து சென்றது. சந்திரகுப்தன்மேல் விழ இருந்த வளைவுப் பொறி தவறி மாவுத்தன் மேல் விழுந்து அவன் இறந் தான். அதே சமயத்தில் உயரத்தில் இருந்த ஒற்றன் தன் தவற்றிலிருந்து உய்யும் பொருட்டுச் சந்திர குப்தன் வடிவில் இருந்த வைரோசனனைத் தாக்கிக் கொன்றான். மாவுத்தன், வைரோசனன் ஆகிய இருவரும் மாண்டனர். இவற்றை அறிந்த மக்கள் வளைவு அமைத்த பொறியமைப்பாளனைக் கொன் றனர். உடனே சந்திரகுப்தனைச் சாணக்கியன் யானை யின்மேல் ஏற்றி முடிசூட்டு விழாவை நடத்தினான். மக்கள் யாவரும், இறந்தது வைரோசனன்தான் என்று மகிழ்ந்தனர். முடிசூட்டு விழா மிகச் சிறப்பாகத்

துவங்கியது. சாணக்கியன் சந்திரனுக்கு முடி சூட்டினன். மகதநாட்டு மக்கள் பேரானந்தம் கொண்டனர். உட் பகைவர்களாக இருந்தவர்கள் வேரறுக்கப் பட்டனர். இனி அரசாட்சியை ஒழுங்குபடுத்தும் பொருட்டு அன்றே புதுப்பணியாளர்களைச் சாணக்கியன் நியமித்தான். எதிரிகளை அடியோடு ஒழித்து விட்டன். சந்திரகுப்தன் பட்டம் ஏற்று ஆட்சி புரியலானன்.

---

# 9. கணையாழியின் செயல்

சந்திரகுப்தனின் முடிசூட்டு விழா சிறந்த முறையில் நடந்தேறியது. மகதநாட்டில்நந்தனுடைய ஆட்சியை வெறுத்திருந்த பெருமக்களெல்லாம் இப்போது கொண்ட பெருமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆயினும் அவர்கள் மறுபடியும் இராட்சசன் முதலியோர்களால் என்ன ஆபத்துக்கள் நேரிடுமோ என்று அஞ்சினர். அதற்கு ஏற்ற வாய்ப்புக்களும் இருந்தன. அவர்களுடைய முயற்சிகளெல்லாம் சந்திர குப்தனின் அரசாட்சியை நிலைநாட்டுவதையே குறிக் கோளாகக் கொண்டமைந்தன. ஆனால் இராட்சசன் வெளிநாட்டில் இருந்தபடியே உள்நாட்டில் சூழ்ச்சி நடத்தி வந்தான். இராட்சசனுடைய ஒற்றர்கள் மகத நாட்டில் இன்னும் வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். இவற்றைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து வந்தான் சாணக்கியன். இதற்கு அவனுடைய ஒற்றர் களாகிய சித்தார்த்தகன் இராஜசேனன் முதலியோர் பேருதவி செய்தனர்.

இராட்சசன் தப்பி ஓடியதற்குக் காரணம், மகத நாட்டில் இனி இருந்தால் தன் காரியத்தைச் சாதிக்க முடியாது என்ற நோக்கந்தான். சந்திரகுப்தனை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவன் மனத்தை விட்டு நீங்கவில்லை. அதற்குக் காரணம் அவன்கொண்ட கடமை யுணர்ச்சிதான். அவன் நந்தனிடத்தில் பணியாற்றி வந்தான். அந்த நந்தனை ஒழித்த சந்திரகுப்தனை ஒழித்துப் பழிவாங்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் இருந்தான். இதற்காக

இராட்சசன் செய்த சூழ்ச்சிகள் என்ன? சந்திரகுப்த னுக்கு உட்பகையாக இருந்தவர்களுள் இருவர் ஒழிந்தனர். அவர்களுள் முக்கியமாக பர்வதன் ஒழிந்துவிட்டான். மூன்ருவதாகப் பர்வதன் மகன் மலயகேது தன் நாட்டிற்கு ஓடிவிட்டான். ஆனல் அவன் கிரேக்கர்களையும், வேறு சிற்றரசர்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு மகத நாட்டின்மேல் படையெடுக்க வேண்டுமென எண்ணி வந்தான்.

மகத நாட்டைவிட்டு நீங்கிய இராட்சசன் மலய கேதுவை அடைந்தான். அவனிடம் நட்புக்கொண் டான். அவனுடைய எண்ணங்கட்கு உடந்தையாக இருந்தான். மலயகேதுவுக்கு இப்பொழுது மிக மகிழ்ச்சி ஏற்பட்டது. சாணக்கியனுக்கு நிகரான ஒரு மதியூகிதன்னை வந்தடைந்தது அவனுக்குப் பெருமை தரும் நிகழ்ச்சி அல்லவா? இவனை வைத்துக் கொண்டே நாம் மகத நாட்டைப் பிடித்துவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினன்.

இராட்சசன் செல்லும்பொழுது சிறந்த ஒற்றர் களை மகத நாட்டில் அமைத்துச் சென்றிருந்தான். அவர்களில் முக்கியமானவர்கள் சந்தனதாசன், சகட தாசன் என்பவர்கள். இவ்விருவரும் இராட்சசனுக்கு உயிர் நண்பர்கள். சந்தனதாசன் இராட்சசனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமானவன். நாட்டைவிட்டு இராட்சசன் வெளியேறும்பொழுது சந்தனதாசனது வீட்டில் தன் மனைவியையும் மகனையும் வைத்துச் சென்றிருந்தான். சந்தனதாச னும் அவன் மனைவியும் இவர்களைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தனர். சந்தனதாசனும்

இராட்சசனுக்கு அப்பொழுதப்பொழுது செய்திகளை அனுப்பி வந்தான்.

இராட்சசன் மனைவி, சந்தனதாசன் முதலியோர் இராட்சசனுக்குச் செய்திகள் அனுப்ப வேண்டி ஒரு வசதி செய்துகொண்டிருந்தார்கள். அது என்னவெனில், இராட்சசன் தான் செல்லுகையில் முத்திரையிட்ட ஒரு மோதிரத்தைத் தன் மனையாளிடம் கொடுத்துச் சென்றிருந்தான். அவர்கள் அனுப்பும் கடிதங்களில் இம்மோதிரத்தில் அமைந்த முத்திரையை இட்டு அனுப்ப வேண்டும். இம்முத்திரை இட்ட கடிதத்தில் பல செய்திகள் அடங்கியிருக்கும்.

இந் நிலையில் சந்திரகுப்தனுக்கு இராட்சசனைப் பற்றிய ஐயுறவு மிகுந்துகொண்டே இருந்தது. இராட்சசன் மேலும் மேலும் என்ன சூழ்ச்சிகள் செய்வானோ என்று கவன்றிருந்தான். ஒரு நாள் சாணக்கியனுடன் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தான் சந்திரகுப்தன். தனக்கு இராட்சசனைப் பற்றிய செய்திகள் எட்டியதைக் கூறினான். ஆனால் சாணக்கியனுக்கு இது தெரியாதா? ஏன்? இராட்சசன் உள்ளத்திலேயும் அப்பொழுதுக்கப்பொழுது என்ன என்ன உதிக்கின்றது என்று ஆராயும் சக்தியுடையவன் சாணக்கியன்!

"அரசே! இராட்சசன் நேராகச் சென்று மலயகேதுவை அடைந்து அவனுடன் நட்புக்கொண்டிருக்கிறான். அவனும் இராட்சசனை ஒரு கருவியாகக் கொண்டு இந்த நாட்டில் படையெடுக்க முயலுகிறான்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட சந்திரகுப்தனுடைய உள்ளம் துடித்தது. 'கடுஞ் சூழ்ச்சிகள் செய்த இராட்சசனை வெளியில் துரத்தியது பெருந்தவறு. அவனை நாம் எப்படியும் பிடித்திருக்க வேண்டும்' அவனுக்கு எந்தத் தண்டனையும் கொடுத்திருக்கலாம். என்றான்.

மதியூகியாகிய சாணக்கியன் அரசனிடம், "அரசே, உன் கருத்துக்களை அறிந்தேன். ஆனால் யான் அவனைத் தண்டனைக்கு ஆளாக்கமாட்டேன். அவனுடைய அறிவைப் பயன்படுத்தி நம்மவன் ஆக்குவேன்" என்றான்.

சந்திர: ஆ! அந்த இராட்சசனையா. மகத நாட்டுக்கே துரோகம் நினைக்கும் அவனையா நம் முடன் சேர்க்கவேண்டும்! அவன் நம்மை ஒழிக்கத் திட்டம் போடமாட்டானா?

சாணக்: அன்புக்குரிய அரசே! யான் கூறும் மொழிகளுக்குச் சற்றுச் செவி சாய்க்க வேண்டும். இராட்சசன் நந்த வம்சத்துக்காகப் பாடுபடுவதும், நம்மை அழிக்க முயல்வதும் நமக்குத் தெரியும். ஆனால் வயிரத்தை வயிரத்தால்தான் அறுக்க வேண்டும். இராட்சசனை இலேசானவன் என எண்ண முடியாது. அவன் பேரறிவாளி, உறுதியும் கடமை யுணர்ச்சியும் மிக்கவன்; அவன் நந்தர்களுடைய அநீதிகளை அறிந் தும் அவர்கட்காகப் பாடுபடக் காரணம் என்ன? அவர் களோடு தான் பழகியதால் ஆற்றும் கடமை உணர்ச்சிதான். இப்பொழுது அவன் மலயகேது விடம் சென்றிருக்கிறான். ஏன்? உள்ளத்தில் ஊன்றிய கடமையே அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது.

அவன் தன் மனைவி மக்களை அயலவன் வீட்டில் வைத்துவிட்டு மலயகேதுவிடம் சென்றிருக்கிறான். உண்மையில் அவன் ஒரு விரோதியல்ல; அவன் எங்கே பணியாற்றுவானோ அங்கே கடமை உணர்ச்சியுடன் இருப்பான் என்பது உறுதி. இராட்சசன் நம் அவைக்களத்தில் மந்திரியாக இருந்தால் அவன் நம்மிடம் கடமையுணர்ச்சியோடு நடந்துகொள்வான் என்பது உறுதி. இக் காரணங்களால் அறிவுடைய ஒருவனை அழிப்பதைக் காட்டிலும் அவன் அறிவை ஏற்று, அவன் தீமையை மாற்றுவதே நம் கடமையாகும். இவற்றோடன்றி உன் உள்ளக் கிடக்கையை நான் அறிவேன். அது என்னிடத்தில் கொண்ட பேரன்பேயன்றி வேறல்ல. என்னுடைய உதவி உனக்குக் கிடைக்காதோ என்று கவலையுறாதே. நான் என்றும் உன்பக்கம் இருப்பவன். நீ வேறு, யான் வேறு அல்ல. இராட்சசன் இங்கே அமைச்சன் பதவி பூண்டாலும் யான் அக் காரியங்களில் ஈடுபடாமல் இருக்கமாட்டேன். மகத நாடு பெரிய நாடாகிவிட்டது. இந்திய நாடு முழுமையும் நம் ஆட்சி நடக்கவேண்டும். அதனை முக்கியமாகக் கவனித்து நாட்டில் நல்லறம் ஓங்கச் செய்ய வேண்டும். அவற்றில் என் கவனம் செல்லும். அரசாட்சித் துறையை இராட்சசன் கவனித்துக் கொள்ளவேண்டும்; பகைவனை அழித்தலைக் காட்டிலும் பகைவனுடைய தீமையை அழித்து அவனுடைய அறிவை ஏற்றுக்கொள்வதே நலம்.

சாணக்கியன் கூற்றுக்களுக்கெல்லாம் சந்திரகுப்தன் செவி சாய்த்தான். தன் அன்புக்கும் நாட்டுக்

கும் பாடுபடும் சாணக்கியனுடைய பெருமையை எண்ணி மகிழ்ந்தான். ஒரு பெரிய அரசாட்சியை நடத்தச் சாணக்கியன் போன்ற பேரறிஞர்களே தேவை என்பதை உள்ளூற உணர்ந்தான். அவன் செய்வதெல்லாம் நன்மையாகவே முடியும் என்று கருதி, “உம்முடைய விருப்பப்படியே செய்யலாம்” என்று கூறினன்.

சாணக்கியன் அப்பொழுது தான் செய்தமைத்த திட்டங்களைக் கூறினன். ‘இராட்சசனுடைய ஒற்றர்கள், நம்மிடம் வட்டமிட்டுப் பணியும் புரிந்து வருகிருர்கள். அவர்கள் உரிய சமயத்தில் இராட்சசனிடம் சொல்லிச் சந்திரனது அழிவைத் தேடக் கூடும்’ என்று கருதி அவர்களைத் தனித்தனியே கண்டுபிடித்துச் சிறை செய்து விட்டதாகக் கூறினன். முக்கியமாக இருவரைச் சிறையில் அடைக்கவில்லை. அவர்கள் சந்தனதாசனும், சகடதாசனுமே. தற்சமயம் அவர்கள் மூலம் இராட்சசன் மனைவி முதலியோர் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து, அவர்கள் செய்திகளை எங்ஙனம் அனுப்புகிருர்கள் என்பதை அறிய முயன்ருன். சாணக்கியன் இதற்கிடையில் நம்பிக்கையான சிலரை அனுப்பி இராட்சசனிடத்தில் சில அரிய காரியங்களைச் சாதித்து வர எண்ணினன். அதற்காகத் தன் அந்தரங்க ஒற்றர்களாகிய இராஜசேனன், பகுராயணன், பத்திரபட்டன் முதலியோரை அனுப்பினன். அவர்கள் இராட்சசன் இருக்கும் இடமாகிய மலயகேதுவின் அரண்மனைக்குச் சென்ருர்கள். அவர்களைப் பார்த்து இராட்சசன் திகைத்தான். உடனே அவர்கள், “அன்பு மிக்க பெரியவரே”

நாங்கள் சாணக்கியனிடம் உண்மையாகப் பணிபுரிந்தோம். அப்படி இருந்தும் அவன் எங்களைக் கடுமையாக வாட்டினான். அவன் கொடுமை தாங்க முடியாமல் நாங்கள் இங்கு ஓடி வந்துவிட்டோம். ஒற்றர்களையெல்லாம் சிறைப்படுத்திவிட்டான். சகடதாசன் முதலியோருக்கும் என்ன நேரிடுமோ?'' என்று கூறினார்கள். இவற்றைக் கேட்ட இராட்சசன் மகிழ்ச்சி யுற்றான். மலயகேதுவும் இவர்களுடைய வரவைக் கண்டு தனக்குச் சாதகமென நினைத்தான். ஆனால் உண்மையாக இவையெல்லாம் சாணக்கியன் செய்த சூழ்ச்சிகளே ஆகும்.

இவர்களைச் சாணக்கியன் இராட்சசனிடம் அனுப்பிவிட்டுச் சந்தனதாசனிடம் ஓர் ஒற்றனை அனுப்பினான். அவனிடமிருந்து செய்தி இராட்சசனுக்கு எப்படிச் செல்லுகின்றது என்பதை ஆராய்வதற்கே இப்படிச் செய்தான். சந்தனதாசன் வீட்டின் வழியாக ஒரு நாள் பாம்பாட்டி ஒருவன் பாடிக்கொண்டு வந்தான். அவனைப் பார்க்கப் பலர் கூடினர். அப்பொழுது இராட்சசனுடைய குழந்தை அங்கு ஓடி வந்தது. இராட்சசன் மனைவி ஓடோடி வந்து அக் குழந்தையை உள்ளே அழைத்துச் சென்றாள். அவள் விரைவாக அழைத்துச் செல்லும்பொழுது அவள் கையினின்றும் இராட்சசனின் முத்திரை மோதிரம் நழுவி விழுந்தது. உடனே ஒருவரும் அறியாதபடி பாம்பாட்டி அக்கணையாழியை எடுத்து வைத்துக் கொண்டான். அவ்வாறு பாடிக்கொண்டு வந்தவன் யார்? சாணக்கியன் ஒற்றனே.

சாணக்கியன் தன் கைக்குக் கணையாழி வந்ததும் பேருவகை கொண்டான். அக்கணையாழியைக் கொண்டு பல செய்திகளை உணர்ந்தான். ஜீவசக்தியை எல்லாரும் இராட்சசனுடைய நண்பன் என்று எண்ணியிருந்தார்கள். அவனுக்கு அந்த ஆழியின் செயல்கள் எல்லாம் தெரியும். அவன் சாணக்கியனிடத்தில், "இம் மோதிரத்தைக் கொண்டுதான் முத்திரை விட்டுச் செய்திகள் இராட்சசனுக்கு அனுப்பப் பெறும்" என்றும் "இம் முத்திரையிட்ட கடிதங்களின் செய்திகள் இராட்சசனுடைய ஒற்றர்கட்குத்தான் தெரியும்" என்றும் மறைவாகச் சாணக்கியனுக்குச் செய்தி எட்டவிட்டான். சாணக்கியன் அக் கணையாழியை வைத்துக்கொண்டு தன் காரியங்களைச் சாதிக்கத் தீர்மானித்தான்.

சாணக்கியன் இப்பொழுது ஒரு தீர்மானம் செய்தான். சித்தார்த்தகனிடம் இராட்சசனுக்குச் சந்தனதாசன் கொடுத்ததாக ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினான். சித்தார்த்தகன் கடிதத்தை எடுத்துக்கொண்டு சென்று நேராக இராட்சசனை அடைந்தான். இராட்சசன் முதலில் இவனைப் பார்த்து ஐயுற்றான். உடனே சித்தார்த்தகன் தன்னைச் சாணக்கியன் வருத்தியதாகவும், கைது செய்யப்பட்ட சகடதாசனைத் தான் விடுவித்ததற்காகக் குற்றம் சாட்டப்பட்டதாகவும் இவற்றைப் பொறுக்காது ஓடி வந்ததாகவும் கூறினான். முத்திரையிட்ட ஒரு கடிதத்தைச் சந்தனதாசன் கொடுத்ததாகவும் கூறினான். இச்செய்திகளைக் ட்ட இராட்சசன் நம்பிவிட்டான். இப்பொழுது

சாணக்கியனுடைய ஒற்றர்களாகிய பகுராயணன், சித்தார்த்தகன், ஜீவசக்தி, இராஜசேனன் முதலியோர் இராட்சசனிடம் தங்கி யிருந்தார்கள்.

சாணக்கியன் அவர்களை அனுப்பியதன் நோக்கம் என்னவென்றால், முக்கியமாகத் தன்னுடைய உட்பகையாயிருந்து வெளியோடிய மலயகேதுவையும், இராட்சசனையும் முதன் முதலில் பிரித்து வைப்பதே யாகும். இவற்றிற்கெல்லாம் இராட்சசனுடைய முத்திரை மோதிரம் சாணக்கியனுக்குக் கருவியாக ஆயிற்று.

# 10. இராட்சசன் பணிவும் அவன் அமைச்சறுதலும்

இராட்சசனுடைய துணையையும், கிரேக்கப் படையின் துணையையும் கொண்டு மகத நாட்டின்மீது படையெடுக்கச் சித்தமாக இருந்தான் மலயகேது. பகுராயணன் முதலியோர் சாணக்கியனுடன் பகைத்துக்கொண்டு வந்த செய்தி கேட்டு அவன் உளம் பூரித்தான். இவற்றையே வாய்ப்பாகக் கொண்டு இராட்சசனையும் தன் கைப்படுத்திக்கொண்டு மகத நாட்டை முற்றுகையிடலாம் என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தான்,

இந்நிலையில் சித்தார்த்தகன் உதவியைக் கொண்டு சகடதாசன் தப்பி இராட்சசன் இருக்கும் இடத்திற்கு வந்தது. மலயகேதுவுக்கு மேலும் தைரியம் ஊட்டியது. ஆனால் அவனுடைய எண்ணத்திற்கு மாருகச் சாணக்கியன் செய்த சூழ்ச்சியை அவன் அறியவே யில்லை.

இவ்வாறு செய்வதன் நோக்கம்மலயகேதுவுக்கும் இராட்சசனுக்குமிடையே பூசலை விளைவித்து இராட்சசனை மகதத்துக்கு அழைத்து வரவேண்டும் என்பதே. பகுராயணன், சித்தார்த்தகன் முதலியோர் அந்தரங்கமாக இவ்விருவரையும் பிரிக்கவும், மலயகேதுவுக்கு இராட்சசனிடத்தில் ஐயுறவு ஏற்படுத்துவதற்கும் உரிய வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில் இராட்சசனுக்கு மேலும் மேலும் உற்சாகத்தை ஊட்டும்பொருட்டு மலயகேது சிறந்த

நாயகமனையதொரு பொன்மாலையை நல்கினன். அம்மாலையைப் பெற்றவுடன் அதை இராட்சசன், தன் நண்பனுகிய சகடதாசனைக் காப்பாற்றிய நன்றிக்காகச் சித்தார்த்தகனுக்குக் கொடுத்துவிட்டான். ஆனால் சித்தார்த்தகன் அதனைப் பெற்றதும் இராட்சசனைப் பார்த்து, "அன்பரே! இம்மாலை இப்பொழுது எனக்கு வேண்டாம். மகதநாட்டில் முழு வெற்றியையும் நாம் பெற்ற பிறகு இதனைப் பரிசாகப் பெறுகின்றேன்" என்று கூறி மாலையைத் திருப்பிக் கொடுக்க வந்தான். அம்மாலையைச் சகடனிடத்தில் கொடுத்து வைக்குமாறு இராட்சசன் பணித்தனன். உடனே சித்தார்த்தகன் தன் கையில் பத்திரமாக வைத்திருந்த இராட்சசனுடைய மோதிரத்தால் முத்திரையிட்டு மாலையைச் சகடனிடம் கொடுத்தான். அந்த மோதிரத்தைச் சாணக்கியன் சித்தன் கையில் கொடுத்தனுப்பி யிருந்தான். அதைப் பார்த்தவுடன் இராட்சசன், "இம்மோதிரம் எங்கே கிடைத்தது?" என வினவினன். உடனே சித்தார்த்தகன் அதை மகதநாட்டில் சந்தனதாசன் என்ற வணிகன் வீட்டு வழியே சென்றுகொண்டிருந்தபொழுது கண்டெடுத்ததாகக் கூறினன். உடனே இராட்சசன் தன் மனைவி தவறி வாயிலில் அதைப் போட்டிருக்கக் கூடுமென்று உணர்ந்தான்.

இவர்கள் திட்டம் இவ்வாறு இருக்கையில், மகத நாட்டில் சாணக்கியன் அருஞ் செயல்கள் ஆற்றி வந்தான். சகடதாசன் ஓடிப் போய்விட்டதாகவும், சித்தார்த்தகன் அவனைக் காப்பாற்றி விட்டதாகவும் சேவகர்கள் கூறினர்கள். இவற்றைக்கேட்ட சாணக்கி

யன் மிக்க கோபத்துடன் கேட்பதுபோல், "பகுராயணன் முதலியோர் எங்கே?" என்றான். அவர்களும் ஓடிப் போய்விட்டதாகக் கூறினர் சேவகர். உடனே ஜீவசக்தியிடமும் கோபங் கொண்டதுபோல காட்டி அவனையும் நாட்டை விட்டு அனுப்பிவிட்டான் சாணக்கியன்.

இவற்றிற்கிடையே சந்திரகுப்த சாணக்கியருக் கிடையே பெரும் பூசல் ஏற்பட்டிருப்பதாக மக்கள் பேசிக்கொண்டார்கள். இப்பூசல் இவர்களே செய்த சூழ்ச்சியின் ஒரு பகுதிதான். மலயகேது, இராட்சசன் ஆகியோர், சந்திரகுப்த சாணக்கியரிடையே மனத் தாங்கல் என்று அறியும் பொருட்டுச் செய்தது இது. அதற்கு ஒரு வாய்ப்பை உண்டு பண்ணினான் சாணக் கியன். 'முழு மதி' என்று ஒரு விழா நடத்துவது மகத நாட்டு மரபு. அவ்விழாவைச் சிறப்புற நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டான் சாணக்கியன். சந்திரகுப்தன் சிறப்பாகச் செய்யக்கூடாதென மறுத் தான். இதனால் இவர்கட்குள் மனவேறுபாடு ஏற்பட்ட தாக ஊரார் சொல்லிக் கொண்டார்கள். இவர்கள் ஒற்றுமையாய்க் கலந்து ஆலோசித்துச் செய்த சூழ்ச்சியே இப்பூசல். மலயகேது இச் செய்தியையும் கேள்வியுற்றான். ஜீவசக்தியும் மலயகேதுவின் நாட்டை அடைந்து விட்டான். இவர்கள் கலந்து இராட்ச சனிடத்தில் ஆலோசிக்கத் துவங்கினர்.

சித்தார்த்தகன் முதலியோர் இந்தப் பேச்சையே பற்றுக்கோடாகக்கொண்டு மலயகேதுவிற்கு இராட்ச சனிடத்தில் ஐயுறவு விளைக்கத் திட்டமிட்டனர். ஜீவசக்தி முதலியவர்களோடு இராட்சசன் அடிக்கடி

பேசிக்கொண்டிருப்பதில் மலயகேதுவுக்குச் சிறிது ஐயம் ஏற்பட்டது. மலயகேதுவின் தந்தை இறந்ததும் அவன் அணிகலன்கள் முதலியவற்றை அந்தணர்கட்குத் தானம் செய்திருந்தனர். சாணக்கியனுடைய ஒற்றர்கள் மாறுவேடம் போட்டுச் சென்று அவ்வணிகலன்களைப் பெற்று வந்தனர். அவற்றைப் பகுராயணன் முதலியோர் மிக ஜாக்கிரதையாக இராட்சசன் இருப்பிடங்களில் அமைத்தனர்.

மலயகேது ஆழ்ந்து எதையும்சிந்திக்கமாட்டான். உடனே மகதத்தின்மேல் படையெடுக்க வேண்டுமென்று கூறினான். ஆனால் இராட்சசன், 'சாணக்கியனுக்கும் சந்திரனுக்கும் மேலும் சிறிது பூசல் விளைந்த பிறகு துவங்கலாம்' என்று கூறிப் போரை நாட்கடத்தினான். இதனால் மலயகேதுவுக்கு இராட்சசனிடத்துச் சிறிது கோபம் மூண்டது.

இராட்சசனிடம் ஐயம் மேலும் அதிகப்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு நாள் இராட்சசனைப் பார்க்கும் பொருட்டு மலயகேது தன் பரிவாரங்களுடன் சென்றான். அப்பொழுது அவன் சாணக்கியனுடைய ஒற்றன் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அவ்வொற்றன் முழுமதி விழாவைப்பற்றியும், சாணக்கியன் சந்திரகுப்தனைப் பிரியும் நிலையில் இருப்பதாகவும் கூறினான். இவற்றை மறைவாகக் கேட்ட மலயகேது இராட்சசன் சந்திரகுப்தனுடைய மந்திரியாவதற்கு முயல்கிறான் என்று தீர்மானித்து விட்டான். உடனே மலயகேதுவெளியே சென்றனன்.

பகுராயணன், ஜீவசக்தி முதலியோர் ஒருதிட்டம் போட்டனர். போர் தொடங்குவதற்குரிய ஆயத்

தங்கள் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தனர். சாணக்கியனுடைய ஒற்றர்கள் நாட்டிற் பரவிஇருக்கக் கூடுமென்றும், அவர்கள் மலயகேதுவின் நாட்டிலிருந்து வெளியே போக முயலக்கூடுமென்றும் உறுதி செய்தனர். அவர்கள் வெளியேறாதிருக்கச் சூழ்ச்சியையும் ஆராய்ந்தனர். ஊர் எல்லையில் தகுந்த காவல் அமைக்கவேண்டுமென்றும், யாரேனும் வெளியே போகவேண்டுமென்றால் அநுமதிச் சீட்டுப் பெற்றே செல்லவேண்டுமென்றும் தீர்மானித்தனர். அநுமதிச் சீட்டுக் கொடுக்கும் பொறுப்பைப் பகுராயணன் ஏற்றுக்கொண்டான். இவையெல்லாம் பகுராயணன், ஜீவசக்தி, சித்தார்த்தகன், இராஜசேனன் ஆகிய நால்வர் கூடிக் கலந்து அந்தரங்கமாக ஆலோசித்துச் செய்த திட்டங்களே ஆகும்.

போருக்கு ஆயத்தமாகிய திட்டங்களை எல்லாம் கேள்வியுற்ற மலயகேது, இராட்சசன் இருவரும் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. மலயகேது பகுராயணனையும் இராஜசேனனையும் முழுமையும் நம்பிவிட்டான். பகுராயணன் ஊரின் எல்லைப்புறத்தில் இருந்து காவல் புரிந்துவந்தான். யார் நாட்டைவிட்டு வெளிச் சென்றாலும் அனுமதிச்சீட்டுப்பெற்றேசெல்ல வேண்டும். சிலர் நாட்டைவிட்டு வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கட்கு அநுமதிச் சீட்டுக் கொடுத்தனுப்பினான். இத்துணை ஏற்பாடுகள் செய்தும் மலையகேதுவுக்கு . இராட்சசனிடத்தில் ஐயுறவு இருந்துகொண்டிருந்தது.

ஒரு நாள் திடீரென்று ஜீவசக்தி பாடலிபுரம் போகத் தீர்மானித்தான். அவனிடம் அநுமதிச்

சீட்டில்லை. எல்லையைவிட்டு, வெளியேற முயலுகையில் பகுராயணன் அவனைத் தடுத்துவிட்டான். ஜீவசக்தி தனக்குக்கூடவா அநுமதிச் சீட்டு வேண்டுமென்று கேட்டான். பகுராயணன், அரசன் சென்றால் கூட அநுமதி பெற்றே செல்லவேண்டுமென்று கூறி மறுத்து அவனை நிறுத்திவிட்டான்.

இவர்கள் இருவரும் அங்கு பேசிக்கொண்டிருக்கையில் சித்தார்த்தகன் திடீரென்று வெளியேறினான். அவனைப் பகுராயணன் பிடித்துவிட்டான். அவனிடம் அநுமதிச் சீட்டில்லை. ஆனால் ஆழியின் முத்திரையிட்ட ஒரு கடிதத்தைக் கண்டுபிடித்தான். பகுராயணன் சித்தார்த்தகனை அக் கடிதத்துடன் அரசனிடத்தில் கொணர்ந்து நிறுத்தினான். பகுராயணனிடத்தில் முழு நம்பிக்கை கொண்ட அரசன் சித்தார்த்தகனிடத்தில் இருந்த கடிதத்தை வாங்கிப் படித்தான். மலயகேது திகைத்துவிட்டான். ஏன் சித்தார்த்தகன் கையிலிருந்த கடிதத்தில் இராட்சசன் முத்திரை இடப்பட்டிருந்தது. கடிதத்தை மலயகேது படித்தான். அக்கடிதத்தில், சந்திரகுப்தனுக்கு இராட்சசன் எழுதியிருப்பதாகக் குறிப்புக் காணப்பட்டது. சித்தார்த்தகன் ஒற்றனாகவும், தூதுவனாகவும் வந்திருக்கக் கூடுமென்று தீர்மானித்தான். இராட்சசன் சந்திரகுப்தனிடத்தில் வந்து சேர விரும்புவதாகவும், சந்திரகுப்தன் அனுப்பிய அணிகலன்களை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டதாகவும் பொருள்படும் நிலையில் கடிதம் அமைந்திருந்தது. அவற்றோடு தான் கொடுத்தனுப்பும் கையுறைப் பொருளை ஏற்குமாறும் வரையப்பட்

டிருந்தது. இவற்றை எல்லாம் கண்ட மலயகேது வுக்கு ஐயுறவு மிகுதிப்பட்டதோடு, கோபமும் வலுத்தது. இராட்சசனைப் பிடித்து வருமாறு உத்தர விட்டான். இராட்சசன் சிறை செய்யப்பட்டான். நிரபராதியாகிய இராட்சசன் ஒன்றும் புரியாமல் கவலைக் கடலில் ஆழ்ந்தான். சித்தார்த்தகன், ஜீவசக்தி முதலியோர் சாணக்கியனிடமிருந்து பெற்றிருந்த அணிகலன்களை எல்லாம் இராட்சசனுடைய அறையில் மறைவாக வைத்திருந்தனர்.

மலயகேது இராட்சசன் வீட்டைச் சோதனை செய்யச் சென்றான். அங்கு அணிகலன்களை யெல்லாம் கண்டான். மிகுந்த சினக்கடலில் மூழ்கினான். இராட்சசன் தனக்குத் துரோகம் செய்த தாகவே உறுதி கொண்டான். மலயகேது நேராகத் தன் அரண்மனை சென்று மேற்கொண்டு யாது செய்வதென்று யோசித்தான், இராட்சசனை வெறுத் தான். அவனைக் கொல்லவும் உள்ளம் துணியவில்லை. அவனை வரவழைத்தான். அவனைப் பார்த்து, 'இராட்சசா! உன்னை நன்றாக அறிந்துகொண்டேன். ஒரு கணமும் என் முன் நில்லாதே. உன்னுடைய அந்தரங்கமான சந்திரகுப்தனிடமே செல். இப் பொழுதே ஓடிப் போ" என்று கூறி அவனைத் துரத்திவிட்டான்.

இராட்சசன் வெளியேறினான், என்ன செய்வ தென்று அறியாது திகைத்தான். அவன் மனம் உடைந்து நடந்து சென்றான். அவன் தனியே நடந்து செல்லுவதைக் கண்ட சித்தார்த்தகன், ஜீவசக்தி

முதலியோர் யாரும் அறியாமல் அவனிடம் சென்று, கவலைப்பட வேண்டாமென்றும், சந்திரகுப்தனிடத்தில் சென்றால் அவன் இவனுடைய பெருமையை உணர்வான் என்றும் சொல்லி ஆறுதல் கூறினர். சந்திரகுப்தனுடைய பெருமைகளை எடுத்துரைத்தனர். அவனுடைய உள்ளத்தை மாற்ற நினைத்தார். கடமை ஒன்றையே பற்றுக் கோடாகக் கொண்ட இராட்சசனிடம் இவர்கள் மொழி பயன் பெறவில்லை. அவன் மனமும் மாறவில்லை. இராட்சசன் ஒருவர் மொழியையும் ஏற்காமல் நாட்டை விட்டு வெளியேறி விட்டான்.

பகுராயணன், ஜீவசக்தி முதலியோர் செய்த சூழ்ச்சிகள் ஒருவாறு பயன்பட்டன. முக்கியமாக, மலயகேதுவுக்கும் இராட்சசனுக்கும் விரோதம் ஏற்பட்டது. இந் நிலையில், மகத நாட்டில் சாணக்கியன் எப்படியாயினும் இராட்சசனை வரவழைப்பதற்குரிய வழிகளையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தான்; மலயகேதுவின் நாட்டில் நடப்பனவற்றை யெல்லாம் ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டிருந்தான். மகத நாட்டில் சந்தனதாசன் வீட்டில் இராட்சசனுடைய மனைவியும் மக்களும் இருந்தனர். இவற்றை அறிந்தான் சாணக்கியன். சந்தனதாசன் வீட்டையும் அறிந்திருந்தான். சந்தனதாசன் மேல் பல குற்றங்களைச் சாட்டினான். சந்திரகுப்தனைக் கொல்லச் சதி செய்த இராட்சசனை வைத்து ஆதரித்து ஒருவரும் அறியாமல் வெளியேற்றிய குற்றமும் அவன்மேல் சாட்டப்பட்டது. சந்தனதாசன் சிறை செய்யப்பட்டான். தான் சிறையில் இருப்பினும், தன் நண்பனுக்காக

உயிரையும் கொடுக்க அவன் தீர்மானித்தான். அவனைக் காட்டிக் கொடுப்பதில்லை என முடிவு செய்தான்.

சேவகர்கள் அருகில் சூழ, சந்தனதாசன் அர்சவைக்குக் கொணரப்பட்டான். சந்தனதாசன் தன்மீது சாட்டப்பட்ட குற்றம் யாதென வினவினான். அரசனைக் கொல்லச் சதி செய்த ஒருவனைத் தன் வீட்டில் வைத்திருந்ததும், அவனை மறைவாக ஒருவரும் அறியாது தப்பியோடச் செய்ததும் பெருங் குற்றங்கள் என்று கூறினர். இவற்றோடன்றி, இராட்சசன் இருக்கும் இடத்தையும் அவனுடைய அந்தரங்கமான செய்திகளையும் கூறுமாறு வற்புறுத்தினர். ஆனால் சந்தனதாசன், உலகம் அசைந்தாலும் தன் உயிருக்குயிரான நண்பனைக் காட்டிக் கொடுக்க முடியாதெனக் கூறிவிட்டான், அவையில் இருந்தோர் எத்தனையோ வற்புறுத்தியும் உறுதியை விடாமல் இருந்தான். அவன் உடன்படாத காரணத்தினால் நாட்டுத் துரோகி என்று குற்றஞ் சாட்டி அவனைக் கொலைத் தண்டனைக்கு ஆளாக்கினர்.

மலயகேதுவின் நாட்டை விட்டு அகன்ற இராட்சசன் தனிப்பட்ட வழியில் ஆழ்ந்த யோசனையில் நடந்து சென்றான். மலையகேதுவின் படைகள் இராட்சசன் அகன்று விட்ட காரணத்தினால் சிறிது கலங்கின. படைக்களத்தில் குழப்பங்களும் ஏற்பட்டன. இவற்றிற்கிடையில் ஒருவாறு தங்கள் சூழ்ச்சிகளும் திட்டங்களும் முடிந்த காரணத்தால் ஜீவசக்தி, பகுராயணன், சித்தார்த்தகன், இராஜசேனன் முதலியோர் மலயகேதுவின் நாட்டைவிட்டு ஓடி மகத நாட்டுக்குச் சென்று சாணக்கியனை அடைந்தனர். இவற்றையெல்லாம்

நன்கறிந்த மலயகேதுவின் நேச மன்னர்கள் அவனை வெறுத்தகன்றனர். சாணக்கியனுடைய ஒற்றர்கள் மலயகேதுவைக் கவனித்துக்கொண்டே யிருந்தனர். படைகளில் ஏற்பட்ட குழப்பம் மிகுதிப்பட்டது. மலயகேது, உளம் ஒடிந்து செயலற்றிருந்தான். அற்றம் பார்த்திருந்த சாணக்கியனுடைய ஒற்றர்கள் அவனைப் பிடித்து மகத நாட்டிற்கு அழைத்துச் சென்று சாணக்கியனிடத்தில் ஒப்புவித்துவிட்டனர்.

நாட்டை விட்டு அகன்ற இராட்சசன் ஒரு கானகத்தின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தான். மலயகேதுவின் நம்பிக்கைத் துரோகமான அடாத செயல்களை நினைத்து நினைத்து உள்ளம் துடித்துக் கொண்டே சென்றான். இருப்பினும் அவன் தனக்குச் செய்த பெருமையையும் நினைத்தான். அப்பொழுது தன் உயிர் நண்பனாகிய சந்தனதாசனைப் பற்றிச் சிந்தித்தான். அவனுடைய நட்பின் பெருமையையும் உன்னினான். வழியில் ஒரு காட்சியைக் கண்டான். அக் காட்சி என்ன? ஒருவன் தன்னைத் தற்கொலை செய்து கொள்ளத் தயாராக இருந்தான். இராட்சசன் விரைவாகச் சென்று அவனைத் தடுத்து, அவன் தற்கொலை செய்துகொள்ளும் காரணத்தையும் வினவினான். உடனே அவன், இராட்சசனிடம் தன் காரியத்தில் குறுக்கிடக் கூடாதென்றும், தன் உயிருக்குயிரான நண்பனாகிய சந்தனதாசனைத் தூக்கிலிடப் போகிறார்கள் என்றும் கூறினான். அவனைத் தூக்கில் இடுவதற்கு முன் தான் இறக்கவேண்டுமென்றும் கூறினான். இக் கூற்றுக்களைக் கேட்ட இராட்சசன் உள்ளம் துடித்தது. செய்வது இன்னதென அறியா

மல் திகைத்தான். நண்பனைக் காப்பதெப்படி என ஆராய்ந்தான். வாயு வேகத்தினும் பறந்து மகத நாட்டினை அடைந்தான்.

சந்தனதாசனைத் தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றனர் அதிகாரிகள். சந்தனதாசன் அருகில் சித்தார்த்தகன் நின்றான். சந்தனதாசனுடைய மனைவி மக்கள் அழுதனர். இராட்சசன் ஓடோடி வந்து கொலையாளிகளைத் தடுத்துச் சந்தனதாசனுக்குப் பதிலாகத் தன்னைத் தூக்கிலிடுமாறு மன்றாடிக் கேட்டான். இவர்களைச் சித்தார்த்தகனும், சாணக்கியனும், சந்திரகுப்தன் இருக்கும் அவைக்களத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கே சாணக்கியன் இராட்சசனைப் பார்த்தான். இராட்சசன் சந்தனதாசன் அருகில் நின்று தன்னைத் தூக்கிலிடுமாறு அரசனைக் கேட்டான். தன் நண்பனைக் காப்பாற்றுமாறும் வேண்டினன்.

சந்திரகுப்தன்: இராட்சசரே! நீர் கேட்பது பொருத்தமன்று. ஒருவர் செய்த குற்றத்திற்காக மற்றவரைத் தண்டிப்பதற்குச் சட்டம் இங்கு இல்லை. இங்கு எல்லாம் முறைப்படிதான் நடக்கும்.

இராட்சசன்: என் நண்பன் சந்தனதாசன் செய்த தவறு யாது?

சந்திர: அரசனைக் கொல்லச் சதி செய்த ஒருவனை மறைத்து வைத்திருந்தது, அவனைத் தப்பி ஓடச் செய்தது ஆகிய குற்றங்கள் இவனைச் சாரும்.

இராட்சசன்: உண்மைதான். ஆனால் அவ்வாறு சதி செய்தவனே நேரில் வந்திருக்கும்போது இவனை விட்டுவிடுவது முறையாகாதா?

சந்திர: அது முறையும் அன்று; சட்டமும் ஆகாது. சதி செய்தவன் சரண் அடைந்த முறையில் சார்ந்து விடுகின்றான். இவ்வாறு சரண் அடைந்த தங்களைத் தனிப்பட்ட முறையில் விசாரிப்போம், சந்தனதாசன்மேல் சாட்டப்பட்ட குற்றம் குற்றமே.

இராட்ச: வேறு வழி இல்லையா? மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் நண்பனை விட்டுவிடுங்கள். நான் உயிரை இழக்கத் தயாராய் இருக்கிறேன். என்னைக் கொன்றுவிடுங்கள்.

சந்திர: அதிருக்கட்டும், உம் நண்பன் தப்புவதற்கு ஒரே வழிதான் உள்ளது.

இராட்ச: என்ன! வழி இருக்கிறதா? கூறுங்கள்.

சாணக்: அதை நானே கூறுகிறேன். தங்களுடைய அருமை நண்பர் தப்பவேண்டும் என்றால் தாங்கள் மகதநாட்டு அமைச்சர் பதவியை ஏற்க வேண்டும்.

இராட்ச: பதவியா! யாரிடம்? நந்தர்களிடம் அமைச்சுப் பூண்ட நானா-அறம், மறம் இவற்றைவிடக் கடமையையே சிறப்பாகக்கொண்ட நானா - சந்திரகுப்தனிடம் அமைச்சனாக வேண்டும்! இராட்சசன் கடமையில் தவறமாட்டான். சாணக்கியரே, அம்மொழிகளை விட்டுவிடுங்கள்.

சந்திர: அப்படியானால் உம் நண்பன் உயிர் இழக்க வேண்டியதுதான்.

உடனே இராட்சசன் சந்தனதாசனைக் கட்டிக் கண்ணீர் விட்டுக் கதறினான். சந்தனதாசனின் மனைவி மக்கள் அழுதனர்.

சாணக்கியன். (இராட்சசன் அருகில் சென்று) இராட்சசரே! நன்ருகச் சிந்தித்துப் பாருங்கள். தங்கள் கடமை உணர்ச்சியை நாங்கள் போற்றுகின்ருேம். ஆனுல் தாங்கள் கடமையோடு அறத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டும். போர் துவங்கியது முதல் தாங்கள் செய்த தீவினைகளை நாங்கள் கருதவில்லை. ஆனுல் தங்கள் கடமை உணர்ச்சியைத்தான் நாங்கள் நோக்கினேம். தங்களுடைய கடமையுணர்ச்சி நந்தர்களுடைய அநீதிக்கும் மறத்திற்கும் இடம்கொடுத்தது. நந்த அரசனுடைய அநீதியால் மாண்டவர் எத்தனை பேர்! உண்மை, துணிவு, கடமை ஆகிய இவற்றை உறுதியாகக் கொண்ட தாங்கள் அவற்றிலும் உளத்தைச் செலுத்தினீர்களா? நாட்டுமக்களின் நலத்தைக் கோர வேண்டாமா? அறத்திஞல் ஆகிய அரசியலின் தன்மை என்ன? மன்னுயிர் எல்லாம் மண்ணுள் வேந்தன் கையில் இல்லையா? ஒருவனுடைய உயிர் கடமைதான். அக்கடமை அறத்தின் வழியே செல்ல வேண்டும். தாங்கள் எத்துணைச் சூழ்ச்சிகள் செய்தீர்கள்? வென்றது அறமா? மறமா? இறுதியில் மலயகேதுவிற்காகப் பாடுபட்டீர்கள். அவன் தங்கட்குச் செய்த நன்றி யாது? தங்களையே சிறை செய்தான். அவன் கதி என்ன ஆயிற்று? அதோ பாருங்கள்; மலய கேதுவை (மலயகேது சிறை செய்யப்பட்டுக் கொணரப்படுகிருன்) எங்களுடைய நோக்கம் என்ன? தாங்கள் எத்துணைச் சூழ்ச்சி செய்தாலும் கடமையைப் பெரிதாகக் கொண்ட தங்களை இந்நாட்டிற்கு வரவழைப்பது என்ற ஒரே குறிக்கோளுடன் இருந்தோம். மகதநாட்டை நோக்குங்கள். கடமை

யுடன் அறத்தையும் கொண்டு அமைச்சுத் தொழிலை ஏற்றுக்கொள்ளுங்கள். இதோ! பிடியுங்கள் இந்த மந்திரிக்குரிய வாளை. இதனை ஏற்று நண்பனைக் காப்பாற்றுங்கள்.

இராட்சசன் ஒன்றும் புரியாமல் திகைத்து ஆழ்ந்து சிந்தித்தான். "ஆம்; கடமை! கடமை! நட்பை விடவா கடமை பெரிது? சந்தனதாசனது நட்பைக் காட்டி லும் எனக்கு வேறொன்றும் பெரிதல்ல. ஆம்! நட்பே மேல். இன்று முதல் நான் புது மனிதன். என் கடமை உணர்ச்சியோடு அறத்தையும்கொண்டு மகதநாட்டு ஒற்றுமைக்காகப் பாடுபடுவேன்.... சாணக்கியரே தங்கள் பெருமையை நன்றாக உணர்ந்தேன். தங்கள் ஆணையைக்கொண்டு மந்திரிக்குரிய வாளை ஏற்கின் றேன். ஆனால் ஒன்று கூறுவேன். எல்லாம் சாணக்கி யனுடைய அறத்தினாலும் ஆணையினாலும் நடக்கும் என்பது உறுதி. சந்திரகுப்தரும், மகத நாடும் நன்கு வாழவேண்டும். ஏன் இந்திய நாடே வாழவேண்டும்! வாழ்க சந்திரகுப்தர்! வாழ்க மகதம்! வாழ்க இந்தியா!" என்றான்.

சாணக்கியன் இராட்சசனைப் பார்த்து, "அருமதி அமைச்சரே, தாங்கள் இப்பொழுது முதலில் செய்யக் கூடிய விதியும் ஆணையும் உண்டா?" என்றான்.

இராட்சசன்: விதியும் ஆணையும் அல்ல. 'யான் தங்க ளைக் கேட்டுக்கொள்ளுவது ஒன்றுதான்; மலயகேது நெறி தவறிச் சென்றாலும், யான் அவரிடம் இருந்து விட்டேன்; அவரை விடுதலை செய்துவிடலாம் என்பது என் கருத்து.

சந்திர: அமைச்சர்களே! மந்திரி இராட்சசரின் உத்திரவுப்படி மலயகேது விடுதலை செய்யப்பட்டான். அவன் தன் நாட்டை அடையலாம். இன்று முதல் மக்களின் நன்மையே நம் கடமையாகக் கொண்ட இராட்சசரும், சாணக்கியரும் நாட்டிற்கு இரண்டு கண்களாக இருந்து அறம், நீதி, நேர்மை முதலிய பண்புகளுடன் அமைச்சுப் பூண்டு விளங்குவார்கள். அவர்கள் பெருமையால் நாடு இனிது விளங்கும் என்பது உறுதி. சந்தனதாசனுடைய உயர் நட்பையும் போற்றி அவனை விடுதலை செய்தோம். யாவரும் வாழ்க.

உடனே யாவரும் ஒருப்பட்ட மனத்துடன் ஒருவரை ஒருவர் வாழ்த்திச் சென்றனர். சாணக்கியன், இராட்சசன் இவர்களுடைய பெருமையால் சந்திரகுப்தன் மதிப்புடன் நாட்டை ஆண்டு வந்தான்.

Books approved by The Madras T. B. C.
for class use, Non-detailed Study.

1. கல்வியின் சிறப்பு - ம. க. ஐயராம்
2. முதல் நாள் - காண்டேகர்
3. உலகப் பெருமக்கள் நால்வர் - முத்துக்கிருட்டின நாட்டார்.
4. கவியும் மொழியும் - த. நா. சேனாபதி, எம். ஏ.
5. கற்பனைக் கதைகள் - ம. க. ஐயராம்
6. தாயகத்துச் சிறுகதைகள் - எம். ராமநாதன்
7. நெசவாளி - தே. வீரராகவன்
8. அரசாளப் பிறந்த நம்பி - அ. நாராயணசாமி
9. நன்மணிக் கதைகள் - ம. க. ஐயராம்
10. நன் மாணவர் ”

**அல்லயன்ஸ் கம்பெனி**
தபால் பெட்டி நெ. 617
மயிலாப்பூர் :: சென்னை - 4